1435

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

18 DEC 1931

Vol 4.] 1931 ஞு நவம்பர் மீ 19உ [No. 46

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	901	6.	யாப்பிலக்கணம் (கொச்சகக் கலிப்பா)	913
2.	சிதம்பரதேவர் சரிதம். Dr. V. S. அருணசலம்பிள்ளை	903	7.	கந்தபுராணமும் சங்கநூல்களும் பண்டிதர் S. R. திம்மப்பா ஐயர்	915
3.	நவராத்திரி—(ஓர் நாடகம்) K. N. சுந்தரேசன் B.A. (Hons)	905	8.	கம்பராமாயணம் (குகப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L.	917
4.	களவியற் காரிகை S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L.	908	9.	மதிப்புரை—(உடற்பயிற்சி. நாட்டுக்கல்வி)	919
5.	சூளாமணி - (தூதுவிடு சருக்கம் 20—30) K. இராமரத்நம்ஐயர் B.A.	911	10.	வர்த்தமானம்.	919

கலாநிலயம்

188944

நல்லாள் நகை. 3.

இனி,வேண்டியபண்டங்களெல்லாம் பொலிந்தாற்றானென்,பணமாகமாறிப் பயின்றாலன்றி அரசியலதிகாரங்கள் நடப்பதெப்படியென நவில்வார் பலர். வர்த்தகத்திற்குஉரைத்த மறுமொழியே இதற்கும் உரைக்கலாம். அரசியலதிகாரிகள் இல்லாமையால் ஒன்றும் அனர்த்தமில்லை ஆட்சிமுறைகளும் அவைகளைச்செலுத்தும் அதிகாரிகளும் சேர்ந்து செய்கின்ற அநர்த்தத்தைவிட விளையக்கூடியவை யாவையென யாரேனுஞ் சிந்தித்ததுண்டோ.குடிகள் வேண்டுவது ஓர் அரசனேயொழிய அவனமைக்கும் முறைகளும் அம்முறைகளைச்செலுத்தும் அதிகாரிகளுமல்ல.வீரமும் வாய்மையும் கருணையும் உடையோனொருவன் திருவருளை முன்னிட்டுத் தன் நாட்டைக் காப்பதற்கென்று செங்கோலேந்திச் சிம்மாதன மேறியவுடன், பரிதிமுன் பனியும் இருளும் என, பசியும் பிணியும் பகையும் அறியாமையும் எல்லாம் தாமே இருந்தவிடந்தெரியாமல் மறைந்துபோம். சான்றவனைய வோர் அரசன் இருக்கவேண்டிய தொன்றேயன்றி யவன் இயற்றவேண்டிய தொன்றுமில்லை. சட்ட முறைகளையும், 'இலக்கா'க்களையும் ஏற்படுத்தி உத்தியோகம் புரியத் தலைப்பட்டவுடன் அரசாட்சி அவலமாயிற்றென்பதைத் தெரிந்துகொள்ளலாம். இப்பொழுது கருதிப் பாராட்டப் பெறுகின்ற எல்லாக் கொள்கைகளுக்கும் தலைமாறாக நாம் இவ்வாறு உலகம் மலைய உரைக்கின்றேமென அஞ்சவேண்டா.

இன்றைக்கே 'போலீஸ் இலாகா'வை யெல்லாம் மூடிவிடட்டும். ஒன்றுங் குடிகெட்டுப் போகாது. இப்பொழுது நடைபெறுகின்றதைவிடக் கொலை கொள்ளை களவு முதலியவைகள் அப்பொழுது அதிகமாய் விடுமென்ற பயமெல்லாம் பொய். பலபடி குறைந்தேயிருக்கும் என்றாலும் அதன் காரணத்தை ஊகிக்கத் தக்க உலகஅநுபவம் இல்லாதார் மிகச் சிலர். இப் போலீஸாருக்குப் பக்கத்துணையாகிய மாஜிஸ்ட்ரேட்டும் சிறைச்சாலையும் இதுகாறும் குற்றவாளி ஒருவனையேனும் திருத்தியதுண்டென்று நினைக்கவும் ஒண்ணுமோ ! இக் காவற் சேவகர்களும் அதிகாரிகளும் அவர் கையாளுங் கருவிகளும்இல்லையாயின் பொருளும் உயிரும் நிச்சயமின்றி நிலைதடுமாறுமே என்று அலமந்து பலர் திகைப்பாரெனின் அதற்கு,மாநுட இயற்கையும் மானத சாத்திரமும் உலகநடை யுண்மைகளும் அறியாமையே காரண மாதல்வேண்டும். இவ்விடயங்களின் விரிவை, "பொன்னெழுத்தால் பொறிக்கலாமோ' அனைய நம் பண்டைத் தலையங்கங்கள் பலவற்றிற் காணலாம்.

இப்படியே, வழக்குமன்றங்களும் அவைகளைச் சூழ்ந்து மொய்த்திருக்கும் பரிவாரங்களும் இருப்பதனினும்இல்லாதொழிவதால் நாம் பெறற்குரிய நலங்கள் மிகப் பெரியதே. வஞ்சனையும் பொய்யும் விரோதமும் முற்றுறச் செல்லக்கூடிய இடங்கள் இந்தக் "கோர்ட்டுகளே" என்பதைத் தேர்வதற்கு அநுபவமும் பகுத்தறிவும் மிகச்சிறிதே வேண்டும். இவ்விடயம் "விளம்பினால் வெட்கக்கேடு" என்னும் வரிசையில் வந்துள்ள தலையங்கங்களில் அடங்கி யிருக்கின்றன. இவையெல்லாம் போகட்டும், 'கல்வி இலாகா' இல்லாமல் என் செய்வது, என்னத் திடுக்கிடுவதும் மெய்யை மறந்த செய்தியேயன்றி வேறன்று.இன்றைக்கே, சர்வகலாசாலைக் கட்டிடங்கள் முதல் ஆரம்பப்பாடசாலைகள் வரையில் எல்லாம் மூடப்படட்டும் ; நாளைக்கே சனங்களுக்குள் உண்மையான கல்வியும் அறிவும் பரவத் தலைப்படும். இதனை ஊகித்துணர்வதற்கும் சிறிது

பகுத்தறிவும் உகை அறிவும் வேண்டும். முன்னைய பல தலையங்கங்களில் இதன் உண்மையை விளக்கியிருக்கின்றோம். இவ்வாறே ஒவ்வொரு இலாகாவையும் இருக்குமிடம் தெரியாமல் போக்கப் போக்க எஞ்சி நிற்பது மேன்மேலும் நன்மையேயன்றிக் கேடொன்றும் விளையாதென்னும் உண்மையை உறுதியாய் உட்கொள்வதற்கு வேண்டிய அறிவினது விளக்கமே மாந்தருக்கு இன்று முதன்மையாக வேண்டப்பட்டு நிற்கின்றது. ஆட்சி அதிகார அங்கங்களெல்லாம் பண நடமாட்டத்தை இன்றியமையாததாக்கி, அதனைத் தொடர்ந்து தோன்றுங் கேடுகளைப் பெருக்குவதேயன்றி அவை செய்யுங் கருமம் வேறு இல்லை. வர்த்தக முறைகளின் கருமமும் அன்னதே.

வறுமை ஒருபுறமும் வஞ்சனை மறுபுறமும் வளர்வதற்குக் காரணம் பணமென்பதைச் சிந்தையிற் கொள்ளுதலோடு, பணத்தின் நடமாட்டம் மனிதவாழ்க்கைக்கு எவ்விதத்திலும் இன்றியமையாததன்றென்பதையும் தெள்ளிதின் தேர்ந்து, அப் பணங்கொண்டு பயில்வதெல்லாம் மனிதரைப் பாழுக்கே இரையாக்கும் புன்மையும் உணர்ந்தவுடன் இவ்வுலகம் தான் இழந்திருந்த மேன்மைகளை மீண்டும் எய்தத் துவக்கிவிட்டதெனக் கருதப்புகுவதே தக்கது. பணக்கொடி பறக்கப் பறக்க மறலியன்ன அதன்நிழலில் மனிதர் இன்றெல்லாத்திசைகளிலும் எத்துணை வருத்தமுற்று வாடுகின்றார்களென்பதைக் கண்கூடாகக் காண்கின்றோமே. பணத்தொடுபசியிலும் இவ்வுலகம் பசிபெருத்துப் பசிக்கின்றது. பசியாது உண்ணவல்லார் நசைகள் பலவற்றால் நைகின்றனர். இவ் இருதிறத்தோரில் பாரே அதிகமும் இரங்குதற்குரியவர் என்று தேர்தலருமை.

ஆம்! இப்படியே சொல்லிவந்தால் சோற்றுக்கு என் செய்வது என்னும் சிந்தனை புகுந்து சிலரை அலைக்கும் என்பதை யாம் மறக்கவில்லை. இவ்வுலகில் எண்ணிறந்தோர் உண்டிருந்து முடிவதே வாழ்க்கையின் கருமமென்று உழல்கின்றாரானாலும் சுட்டும் பணமனைத்தும் அவ்வுணவிற்கே வேண்டற்பாலதோ என்பதையும் அதனயலில் சற்றே ஆழ்ந்து நோக்குதல் அவசியம். எவ்வித நன்மைக்கும் எவ்வித இன்பத்திற்கும் அவ்வலற்றிற்குரிய பண்டங்கள்போதும். தீமைக்குந் துன்பத்திற்குமேயன்றி மற்றெதற்கும் பணம்பக்கத்துணையன்று. நேரானவாழ்க்கைமுறையமைந்தகாட்டில் மக்களுக்கு வேண்டிய பொருள்களெல்லாம் நிலமடந்தை சுரந்தளிக்கக் காத்திருக்கின்றாள். மக்களாயினோர் அவைகளைச் சென்று திரட்டிக் கொள்வதல்லால் வேறோர் வருத்தம் வேண்டியதில்லை. கொள்வாரிலாமையால் கொடுப்பாரும், கள்வா ரிலாமையால் காவலும் இல்லாக் கோசல நாட்டின்கண்,

கதிர்படு வயலினுள்ள கடிகமழ் பொழிலினுள்ள
முதிர்பல மரத்தினுள்ள முதிரைகள் புறவினுள்ள
பதிப்படு கொடியினுள்ள படிவளர் குழியினுள்ள
மதுவள மலரிற்கொள்ளும் வண்டென மன்னர்
[கொள்வார்

என அக் கவிக்கரசு கம்பர் பாடும்போது, "ஐயகோ, இந் நன்னிலையை நினைக்கத்தானும் இக்காலத்தினர் கற்றிலரே" என, உயிர்வாழ்க்கையின் உண்மைப் பெருமையை உணர்ந்தவர்தம் உள்ளங்கள் வதங்கும். தாம் சென்று முயன்று ஆக்காத தேனை நுகருமவ் வண்டுகளேபோல் அந்நாட்டில் மக்கள் [illegible] வருந்திச் செய்யாமல் பொருந்திய இன்பமோடு பெற்றிருந்த மேன்மையும், "வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்" என்ற நாயனார் திருக்குறளிற் கிணங்க, அன்பொன்றே ஆதாரமாய்ப் பற்றி வளர்கின்ற வாழ்க்கைக்கு எப்பொருளும் எளிதிலே சென்றெய்துமென்னுந் தத்துவத்தின் தூய்மையும் விளங்க ஸ்ரீமான் சேஷாசல ஐயர் தம் கம்பராமாயணக் கட்டுரைகளொன்றில், "வித்திடாதொரு வயல் விளைத்தவர்" என்னுந் தலைப்பின்கீழ் (1 வது வால்-4வது இதழ்)வரைந்துள்ள விடயங்கள் இவ்விடத்தில் எடுத்தோதற்குரியன.

வாழ்க்கையின் அந்தச் சித்திரத்தையும் பாருங்கள்—இப்பொழுது, சுகங்களைத் தேடுகின்றோம் என்னும் பேரால் சோகமே தோய்ந்த இந்தச் சித்திரத்தையும் பாருங்கள். அவர் பணத்தைக் கையாளாமல் நிலத்திற் கொண்ட பண்டங்களை வைத்தே வாழ்ந்தவர். இவரோ, கடிதிற் பணமாக்கிக்கொள்ளும்படி, நெல்லையும் விட்டு, நீலமும் நிலக்கடலையும் பயிர்செய்து பிழைப்பவர். ஏனையோர் இருந்தநிலத்தையும் விற்றுப் பணத்தைப் பெருக்கும் பொருட்டு உத்தியோகத்திற்கும் வர்த்தகத்திற்கும் மூலதனமாக்கிவிட்டவராயினர். இதனால் நேர்ந்தகேடு எத்துணை கொடியதாகி எல்லாரையும் வறுக்கின்றதென்பதை இந்நாள் பலபடச் சொல்லவும்வேண்டுமோ.

இவ்வளவும், பணத்தின் பொருட்டுச் செய்யும் வர்த்தகத்தாலும் அவ்வர்த்தகத்தைச் சார்ந்தியங்கும் அரசியல்அதிகார முறைகளாலும் விளையுந்தீமைகள். வர்த்தகத்தின் வளர்ச்சிகளுக்கு மற்றமுறைகளைவிடப் பொதுஜன ஆட்சி முறையே மிகச் சிறந்ததென்பர். இம்முறையிலே, தங்களுக்கு வேண்டுவது இன்னதெனத் தெரியலாற்றாச் சனங்கள், உரத்துப்பேசி வருகின்ற பெரும்பெரும் பொய்யர்களின் வஞ்சனைக்கே இரையாகித் தீர்கின்றபாவத்தை எடுத்துக் கூறினாலும் கேட்பாரிலர். பொதுஜன ஆட்சிமுறை நடைபெறுவதற்கு வரிவருவாய் அதிகம் வேண்டியிருக்கின்றது. இவ்வரியோ, மனிதருடைய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாவதை ஆங்கிலஆசிரியர், ஹால் கேய்ன் (Hall Caine) என்பவர் ஒருவர்

Taxes on the labourers' wages, on his bread, on his salt, on the very air he breathes! state pawn shops to drain his last drop of blood, and state lotteries to strip him of the last rag of independance! No wonder if he sinks into every excess and becomes a savage. I never go by a crowded alley where men are drinking, and women are fighting, and children crying at their mother's skirts, without wanting to take off my hat to the martyrs of humanity.

என்று இயம்பும்போது கண்ணீருகுக்காதார் கன்னெஞ்ச ராதல் வேண்டும்.

அரசியல் அதிகாரங்கள் பல 'இலாகா'க்களாகப் பின்னிப்பின்னிப் பிடிக்கும் வலைகளேயாக அவ்வலைகளைச் செய்வதற்கு வரியும் அதிகமாகவேண்டுமென்பது இன்றியமையாததாகின்றது. குடிவாழ்க்கையைக் கெடுத்தொழிப்பதெல்லாம் வரிகளின்பலவகைகளே. நிலமடந்தை தன் மக்களுக்கு நெல்விளைத்தளிக்கின் [illegible] இட்டுண்டு இருந்து வாழவொட்டாமல் விற்று விற்று வரியாகப் பறிகொடுக்க நேர்கின்றது. "கிளிகளுக்குப் பூனையென வரியுளது வருவாய்க்கு" என்று அண்டபுராணத்தில், கொதுகின் கதியுரைத்த படலத்தில் கூறிய செய்யுளடி ஒன்று (3-வது வால் 1-வது இதழ்) இப்பொழுது எம் நினைவிற்கு வருகின்றது. ஓரைம்பது ஆண்டுகளுக்குமுன் தஞ்சை ஜில்லாவில் டிஸ்ட்டிரிக்ட் முன்ஸீப்பாயிருந்தவரும், அறிவும் தமிழின் அருமையும் வாய்ந்தவருமான நம் வேதநாயகம்பிள்ளை அவர்கள், திருமால் மண்ணுண்டதற்குக் காரணம் கற்பிப்பார்போல்,

மாவலி தந்த நிலமுமுன் மேய்த்தபன் மாடுகளும்
காவலெட் டாமத தாரக் கலப்பையுங் கையிருந்தும்
ஆவல்செய் தீர்வை யதிகாரி கள்வம்புக் கஞ்சிப்பயிர்ச்
சீவனம் விட்டுமண் ணுண்டுயிர் வாழ்ந்தனன் சீதரனே

எனப்பாடுங்கால் நகைமிக விளைகின்றதெனினும் அந்நகையினூடு நீங்காத்துயரமொன்று உருவித்தைக்கின்றதே. மகாபலி சக்ரவர்த்தியினிடம் அளந்து வாங்கிக்கொண்ட நிலமும், கிருஷ்ணாவதாரத்தில் வளர்த்த மாடுகளும், அண்ணன் பலராமனது கைக்கலப்பையும் ஆகிய இவைகளெல்லாம் பயிர்த்தொழில்செய்து வாழப் பாங்குடன் அமைந்திருந்தும், திருமாலே நீ தீர்வை செலுத்தமாட்டாமலன்றோ மண்ணை அள்ளி வாயில் போட்டுக்கொண்டு போயினாய், என்றுகேட்ட கேள்வி இக்காலம் எல்லாப்படியாலும் யாவருக்கும் ஏற்றதே.

எனினும் உண்மைப் பொருளொன்று இச்செவ்வியில் உணர்தல்வேண்டும். இதுதான் வரிவாங்குவோர் பிழையன்று. பணம் செய்வதனிமித்தம் அரசியல் முறைகளை அமைக்கப் புகுவார் பிழை. பற்பலவகைகளில் பணம் செய்யவேண்டுமாயின் ஆட்சிமுறைகளும் அதிகாரவர்க்கங்களும் அவசியம். அவ்வாட்சி முறை அதிகாரவர்க்கங்களுக்குத் தின்னும் இரையாக வரியும் அவசியமாகின்றது. வரி அவசியமானால் அதனின்று வருவித்துக்கொண்டவைகளையெல்லாம் சனங்கள் அநுபவித்துத்தானே தீரவேண்டும்.

சிதம்பரதேவர் சரிதம்.

[889-வது பக்கத் தொடர்ச்சி]

கோமளாங்கன் செவியில் இவை காய்ச்சின நாராசம்போல் பட்டன. உடனே பிரயாணத்தை நிறுத்தி, "சிதம்பரனை எவ்வண்ணம் கொல்வோம், நிராயுதபாணியும் சன்னியாசியும், எனக்கு யாதொரு குற்றமும் செய்யாதவனுமாகிய இவனைக்கொன்றால் மிகப் பெரிய பாபம் நேரிடுமே" என்று பலவாறெண்ணிப் பிறகு திடங்கொண்டு தன் சேவகர்களை அவ்விடத்திலேயே நிற்கும்படி கட்டளையிட்டு ஆயுதபாணியாய் விரைந்து சென்றான். சிதம்பரசேகரன் காலைக்கடனை முடிக்கத் தனதாச்சிரமம் விட்டுத் தடாக தீர்த்தத்திற்குப் போயிருந்தான். புகழேந்தி, கோமளாங்கன் போகவே இனித் துன்பமில்லையென்றெண்ணிக் கனிகிழங்காதிகளைச்சம்பாதிக்கச் சென்றான். கோமளாங்கன் சிதம்பரனை ஆச்சிரமத்திற் காணாமையால் தடாகவழி சென்று அவனைக் கண்டு கடுங்கோபம் மேலிட்டு, "அடா பயலே! நீ சன்னியாசி வேஷம் பூண்டு சமயம் வாய்த்தபோது என்னைக் கொல்ல எண்ணி இருக்கிறாய். உன் பசப்பான தந்திர மொழிகளை நான் நம்புகிறவனல்லன். இதோ உன்னை வாளுக்கிரை செய்கிறேன்" என்று கூறி வாளை ஓங்கினான். சிதம்பரன் பார்த்து க்ஷத்திரியனாகையால் ரோஷம் பூண்டு கோமளாங்கன்மீது நிமிஷத்தில் சிம்மம்போல் பாய்ந்து,

நாடிழந்தனன் நகரினை யிழந்தனன் பெற்ற
வீடிழந்தனன் விண்ணையு மிழந்தனன் விதியால்
காடுறைந்துயான் கடுந்தவம் புரிந்துமென் மேற்கோள்
கேடிழந்திலை கெடுவெனப் புடைத்தனன் கிளர்ந்தே

கோமளாங்கன் வாளை உபயோகிப்பதற்குள், தன் சக்தியெல்லாஞ் சேர்த்து அவன் மார்பில் அறைந்தான். அவன் திகிலடைந்து பூமியில் வீழ்ந்து சாவுக்குச் சரியான மூர்ச்சையடைந்தான். சிதம்பரன் தடாகத்திலிறங்கி ஸ்நானஞ் செய்து பராபரக் கடவுளை ஜலத்தில் நின்றபடியே தியானித்துக் கொண்டிருந்தான். கோமளாங்கன் மூர்ச்சை தெளிந்தெழுந்து சுற்றிப் பார்த்துத் தானடிபட்டுவீழ்ந்ததை நினைத்து இவ்வளவு பலமுடைய சத்துருவை இனி க்ஷணப்பொழுதேனும் வைக்கலாகாதென்று உருவின வாளுடன் தேடி ஜலத்தில் நின்றிருந்த சிதம்பரனருகிற் செல்லப் பயந்து, வாளை உறையிலிட்டு அதிவேகமாய்த் துப்பாக்கியை எடுத்து அவன் மார்பிற்குநேரே இலக்குவைத்துச் சுட்டான். உடனே சிதம்பரன், "அரஹர மஹா தேவா" என்று தடாகத்தில் வீழ்ந்தான். கோமளாங்கன் அருகிற் சென்று பார்த்து இரத்தம் பீறிட்டு ஒழுகவும், சிதம்பரன் அரையுடல் கரையிலும் அரையுடல் ஜலத்திலும் வீழ்ந்து கிடக்கவுங் கண்டு ஆனந்தமுற்று, "இவனிறந்தான்; இனிச் சன்னியாசியாற் பயமில்லை" என்று துணைவர்களையடுத்து நடந்தவைகளைச் சொல்லிப் பாலைவனத்தை நோக்கிப் போயினன்.

தடாகத்தினருகில் மறைந்திருந்த யோகீஸ்வரர் அதிக துரிதமாய் ஓடி வந்து சிதம்பரனை யெடுத்து மார்போடணைத்து, "அப்பா சிஷ்ய சிகாமணியே! நீ இறந்தாயோ! உன் சொற்படி இருபத்து இரண்டாவது வயதாயிற்றே. சத்ரு தேடிவந்து நிரபராதியும் மகாஸாதுவுமான உன்னைக் கண்டு திரும்பினவன், பாமவாக்குப் பழுதாகாமல் நிறைவேறும்படி மறுபடியும் வந்து கொலைசெய்து விட்டானே! இனி உன்னைப்போற் பிரம்மக்யானத்திற்குரிய தீவிர பக்குவமுடைய ஒருசற்பாத்திரனை யான் எங்கே பார்க்கப் போகிறேன்," என்று பிரலாபித்துச் சிதம்பரன் மார்பைச் சோதித்து அவன் முகத்தையும் குண்டுபட்ட விடத்தையுஞ் சுத்திசெய்துகொண்டிருக்கும்போது புகழேந்தி மனோவேக வாயுவேகமாய் ஓடி வந்து சிதம்பரன் தேகத்தின்மேல் விழுந்து பிரலாபிக்க, யோகீஸ்வரர் அவனை அப்பால் நீக்கிவிட்டு, யாதோ ஒரு பச்சிலையைக் கையிற் பிழிந்து ரசத்தைச் சிதம்பரன் வாயிலும் மூக்கிலும் சிறிதுவார்த்து மந்திரோச்

சாடனம் பண்ணி, "சிதம்பரசேகரா! எழுந்திரு" என்று மூன்றுதடவை உரைக்கச் சிதம்பரன் நித்திரைநீங்கி எழுந்திருப்பவன்போல் எழுந்து யோகீஸ்வரர் பாதத்தில் நமஸ்கரித்து ஒன்றும் பேசாமல் நின்றான். புகழேந்தி அடங்காத சந்தோஷத்துடன் ஆனந்தபாஷ்பம் பெருகக் கைகூப்பி யோகீஸ்வரரைப் போற்றி செய்தான். அவர்களிருவரையும் அவர்கள் ஆச்சிரமமழைத்துச் சென்று அடிசிலுண்பித்து ஆயாசந்தீர்த்துப் பிறகு தனதாச்சிரமத்திற்கழைத்துப் போய் அருகிலுட்காரவைத்து, "ஓ சிதம்பரசேகரா, உன்னை எப்போதுங் கவனித்துவருவது எனது வேலைகளிலொன்றாயிருந்தது. விஜயன் என்று ஒரு ஆத்மபோதமடைந்த புண்ணியவான் முன்னே உன்னிடம் வந்து சொன்ன விருத்தாந்தங்களால் உன் மனம் பலவாறு சஞ்சலப்பட்டுத் தேறிக்கொண்டிருந்தது. இன்றைக்கு உன்னைக் கொலைசெய்து போன துஷ்டனால் உனக்குக் கோபம் பிறந்து மனோதிடங் குறைபட்டுவிட்டது. பரமவாக்குப் பழுதுபோகாமலிருக்க அவனே சத்ருவாய் ஏற்பட்டான். இனியுனக்கு மரணபயம் கொஞ்சமும் வேண்டாம். நீடித்த ஆயுள் கடவுள் கொடுத்திருக்கின்றார். ஆகையால் நான் இனிச் சொல்வதைக் கவனித்துக் கேள். பிரபஞ்சத்திற் சற்றும் பழக்கமில்லாமல் மனோஸஞ்சலம் அடங்கமாட்டாது. கிரகத்திலிருந்து விவகாரம் நடத்திக்கொண்டு சித்தையை யடக்கி நிஷ்டைபுரிந்து ஆத்மஞானம் பெற்று மோக்ஷமடைவது மஹாமேன்மை. ஜனகமகாராஜன் பகீரதன் புரூரவ சக்ரவர்த்தி முதலான ஞானிகள் பிரமவித்துக்களாயிருந்து மோக்ஷமடைந்து இருக்கிறார்கள். இடம்பொருள் ஏவலென்னும்மூன்று பாக்கியங்களுமுடைய பிரமவித்துக்களுக்கும் கஷ்டமின்றிச் சமாதி பழகுதல் சுலபம். நீ அரசன் இராஜாங்க மேற்றுச்சமதமாதிகளை வசப்படுத்தி ஜலத்திலிருக்கும் தாமரை இலையைப்போல் உலகத்திலிருந்து இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்யினும் அதில்பற்றின்றிப்பழகுவது மிகநன்மை. நான் உங்களிருவருக்கும் கொடுக்கும் வெகுமதிகளைத் தடை சொல்லாதுபெற்றுக் காலதாமதமின்றி நாட்டுக்குச் சென்று கொலைபடப்போகும் உங்கள் பிதாக்களை விரைவில் இரக்ஷித்துச் சத்துருக்களை ஜயித்து, சக்ரவர்த்தியும் மந்திரியுமாய்ப் பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்றுத் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ்செய்து நீதிவழுவாது நடந்துகொண்டு என்னுபதேசங்களை மறவாது சம்வாதம்பண்ணி விசாரணைசெய்து நிஷ்டையிலே மனத்தைச் செலுத்திவாழுங்கள். நான் அடிக்கடி வந்து பார்த்து மனக்கலக்கத்தை நிவர்த்தி செய்துவருகின்றேன்" என்றார்.

இதைக் கேட்ட சிதம்பரசேகரன் ஆசாரியரை நமஸ்கரித்து, "அப்பனே! இகலோக பரலோக இன்பங்களை விட்ட எனக்கு இராஜ்ஜியம் எதற்கு? யுத்தம் எதற்கு? நான் யுத்தத்தில் கொல்வதும் பந்துக்களை யல்லவோ? ஆகையால் அவையாவையும் என்னை அணுகாதிருக்கும்படி கருணை கூர்ந்து இவ்விடத்திலேயே ஆத்மஞான அனுபவமாம்பொருட்டு அனுக்கிரகிக்கவேண்டும்" என, யோகீஸ்வரர் அவனை ஆசீர்வதித்து "ஓ சிதம்பரா! உனக்கு ஆத்ம ஞானத்தை அனுபவப் படுத்துகிறேன். நீ பயப்பட வேண்டாம். கடவுள் கிருபை செய்வார். பந்துக்களைக் கொல்வதென்றும், யுத்தமென்றும், இராஜ்ஜியம் யாருக்கென்றும் கேட்டாயே! ஆத்மா நசிப்பதல்லவென்றும் நசிப்பது தேஹமென்றும், கர்மங்கள் செய்பவை யாவும் அந்தக்கரண விவகாரமென்றும் நிஷ்காமியமாய்ச் செய்யின் ஆத்மாவுக் கவைகள் பற்றுபவையல்லவென்றும், நான் முன்னமே சொல்லியதை நீ மறந்தவன்போல் தேஹத்தை, "நான்" எனப் பாவித்துப் பேசுவது சரியன்று. ஆத்மாவை உன்னாலும், உன்னைப் போன்ற கோடானு கோடி ஜீவர்களாலும் கொல்ல முடியாது. நீ கொல்வது ஜடமான இத்தேகத்தையே. நீ உன் அரச தர்மத்தையே கைக்கொண்டு துஷ்ட நிக்ரகஞ் செய்யவேண்டும். காமம் குரோதம் லோபம் முதலான இந்திரியசேஷ்டைகளை வெல்வதுபோல உனது சத்ருக்களாகிய துஷ்டர்களை வென்று இராஜ்ஜியத்தை ஏற்றுப் பிரமவித்தாயிருந்து சமாதி பழகிவருவதால் நீ இச்சித்தபடி ஆத்மசொரூப அனுபவம் ஆகும். என் வார்த்தையைத் தள்ளாதே" என்றார்.

இதைக் கேட்டு இருவரும் அவரை வணங்கி அஞ்சலியஸ்த்தராய், "தேவரீர் சித்தம் எங்கள் பாக்கியம். எங்கள் பிதாக்கள் கொலைபடப் போகிறார்கள் என்றுரைத்தது யாதோ தெரிவிக்க வேண்டுகிறோம்" என, "கோமளாங்கன் சிதம்பரனைக் கொன்றோமென்றெண்ணிப் பாலவனஞ்சென்று உங்கள் பிதாக்களைக் கொன்றால் சத்துருபயம் அறுமென்றுநினைத்துப்போகிறான்; நீங்கள் அவர்களைக் காப்பாற்றச் செல்லவேண்டும்" என்றுரைத்து, இருவருக்கும் ஒவ்வோர் புரவியும் கவசமும் சக்கிராயுதமும் சிருஷ்டித்துக்கொடுத்து அனுப்பிச் சமாதியிலிருந்தார். சிதம்பரனும் புகழேந்தியும் ஆசாரியரைச் சாஷ்டாங்கமாக வணங்கி விடைபெற்றுப் புரவிகளை நடத்தி அம்மன் சன்னிதி சென்று நமஸ்கரித்துப் பிரசாதம் பெற்றுண்டு, சுப்ரமண்யஞ் சென்று தரிசித்துத் துதித்து மனோவேகமாய்ப் பாலவனஞ் சென்றனர்

ஆறெழுத்தந்தாதி :—அகத்திய முனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி என்னும் இந்நூல், முருகக்கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனைசெய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்திய முனிவரே பாடியதெனக் கருதப்படுவது. நூறு செய்யுள்கள் இந்நூலில் உள. பாராயணத்திற்குரியது. Dr. V. S. அருணாசலம்பிள்ளை அவர்கள் இயற்றிய பதவுரை விளக்கம் முதலியவைகளைக் கொண்டது. விலை அணா 12. தபால் சார்ஜ் வேறு.

ஏமாங்கதத்திளவரசன் :—இது ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயரால் எழுதப்பட்ட நாவல்நூல். இலக்கிய நலம் துலங்கும் இக்காதற்கதை படிப்பவரைக் கவரும் தன்மையது. விலை ரூ. 1. தபால் சார்ஜ் வேறு.

கலா நிலயம், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

நவராத்திரி

[ஓர் நாடகம்]

[892-வது பக்கத் தொடர்ச்சி]

காமா:—நீ அரக்கனாக வேண்டாம்—அமானுகவேயிரு. சாமியாரைக் கவனிக்காமல், நாம் உலகினையே மறக்கும் காதலர்போல் அவர்க்குப் பிழைசெய்கிறோமே

உரு:—என்ன, அடிகளே, புது யோசனை என்ன?

துரை:—சின்னஞ்சிறு குறள் பெண்ணே இது—ஆணுமல்ல—பேதையை—நேற்றே உதித்தானை வசியம் செய்யத் தொண்டானந்த அடிகள் என்ற பேர்கொண்ட நான்—வசியம் செய்ய இயலவில்லையே—எனக்கே வியப்பும் விந்தையும் விசனமும் விழுமமும் வினோதமும் வெட்கமுமாயிருக்கிறதே—தலைகாட்டாமல் காட்டிற் கோடுவதே மேல்.

உரு:—மீண்டும் தவமும் தானமும் பயிலவோ—கானிலே யார் தானம் தருவர்—

காமா:—சிச்சீ — அயரவேண்டாம்—என் செய்தியும் மற்று உளது—கைசோரவேண்டாம்!

துரை:—உம் குறையைத் தீர்ப்பதில் கஷ்டம் யாதுமில்லை—நோயாளியேமனத்திடமொடு அவாவுவதால். இங்கோ இந்தக் குரும்பை—பொறுமை உணராமல் வேண்டாவெறுப்பாய், பிடிவாதமும் பேதைமையும் பித்துமாக...

உரு:—(இடது தாழ்வாரமடைந்து)—சரி—புதுக் கமிஷன் யோசனை தொடங்குகிறது—

காமா:—எத்தனை கமிஷன் வேண்டுமாயினும் தருகிறேன்—பணத்தினால் பின்வாங்கமாட்டேன்—கூச வேண்டாம்.

துரை:—கமிஷனுவது, தாகாவது—துயர்தரும் மெய்யும் உண்மையுமிது......

காமா:—என்ன?

துரை:—இப்போது—சிறிதுமுன்......படைத்துக் காட்டினேமே—பழுப்பிலைகளுக்கு உயருட்டல்—

உரு:-அந்த மாபெரும் பிரம்மசத்தி வாய்ந்தோர்க்கு இது அரிதா—பெரிதா......

துரை:—இல்லைதான்-எனின், உருவும் உயரமும் சாயலும் காயமும் கனமும் தோற்றமும் இபக்கமும் எத்தனை வேற்றுமை உயிர்பொலி பெண்ணுக்கும், ஒரு வெற்றுப் பொம்மைக்கும்! அறிவு முளைத்த பெண், ஆதிமூலம் கண்ணும் கருத்தும் எளிதில்இயல் மறந்து ஏமாறுமா; அவளது சிந்தையைக்கவரக் கடினமாயிருக்கிறது. அவள் சாகுமுன்னரேயே என்னை அழைத்திருப்பின்——

காமா:—செத்த பின்னர்த்தானே அன்னைப் பித்து எழுந்து கொழுந்துகொண்டு, — முன்னரில்லையே-

துரை:—நாம் நவில நாடியதை நன்கு கேட்காமல் எதிர்விளம்பக் கூடாதென—சீடரும் பத்தகோடிகள் அறியாரா?

காமா:—மன்னிக்கவும்—கோபியேனே தீர்த்திருப்பேன் என்கிறீர்களோ-செத்தால் அத்துணை கேடல்ல.

துரை:—அது அல்ல......பிணத்தைத் தீயிலிடு முன்னரேயே நான் வந்திருந்தால்-என் கைத்திறனும் சாத்தியமும் இன்றுபோல் தோற்றுச் சோர்ந்திராது-சாம்பலை உயிர்ப்பிக்க முடியுமா?

காமா:—சாம்பல்கூடக் கிடைக்காதே, என் செய்ய?

உரு:—நான் உடம்புமேல் கையால் தடவி மெஸ்மரைஸ் செய்யுமாறு முட்டிக்கொண்டேன். என் பேச்சை மதிக்காவிடின்?

துரை:—சொன்னயா நீ—நினைவில்லையே எனக்கு—ஒன்றும் தலை கால் இடை தெரியவில்லை—அவள்விழித்த நோக்கிலே நடுங்கி விட்டேன், பதறிவிட்டேன்!

காமா:—நன்று, நன்று!

உரு:—வெட்கம்! வெட்கம்!!

துரை:—மெய்யைச் சொல்லிவிட்டேன்......

உரு:—(கோவமாய் விழித்து ஒரு சைகை காட்டி) மெய் என்ன?

காமா:—முடியாதா?

துரை: —உம்—உம்— (தயங்கி வழிய) (சுபத்திரை குரல்) பாட்டி, பாட்டி!

காமா:—சரி — தெரிந்துகொண்டேன்—என் தலைவிதி— அவளைக் கட்டி அழுணும் — அம்மாப்பல்லவி அவள் பாட நான் அனுபல்லவி அப்பம் பப்பம் உளறிக் கொண்டு—(உள்செல்கிறான்.)

உரு:—துரை சிங்கா—இதோ உன் சிம்மத்தனம்?

துரை:—இயல்வதன்றாயின்-முனைவதேன்— வா—ஒருவருமில்லை மோட்டரேறுவோம், புறப்படு! இன்னமும் இருத்தல் மானக்கேடு— எனது தாடி உதிர்ந்திடும்போல் தளர்கிறது — அப்பொழுது இழுத்தே விட்டிருப்பேன்-தப்பினேன்...

உரு:—வேடம் அத்தனை முன்யோசனையும் முழு அரண்மையுமாக அணிந்து துணிந்தாய் வெளிவா! சதா யோசனைத் தலையாட்டம்! யோசித்திருக்கிறேன் நானென்று! மோட்டார்-காலியாகப்...

துரை:— யாது — மோட்டாரில் போகும்போது சொல்லு—புறப்படு (எழுகிறான்)

உரு:—புறப்பட அவள் இன்னும் வரவில்லையே.

துரை:—வந்தால், என் தாடி போய்விடும் ஒருதலை.

உரு:—உன் தலை ஒருதலைதான்...பிடித்திழுத்தால் வலிக்காது, அஞ்சாதே—பேசாமலிரு—குஞ்சு அல்ல-

துரை:—கிழப்பழமா—

உரு:—கொழும்பழம்—சுபத்திரை!

துரை:—சுபத்திரையா—அவள் எதற்கு?

உரு:—மெய்த்துறவியோ நீ?

துரை:—(சிரித்து) என்ன யோசனை, சொல்லு!

உரு:—அந்தத் தடியன் அந்த அறையிலிருக்கிறான்—குறவன்—குறும்பன்—பெரிய சாதுபோல் நடிக்கிறான். சிறைவாசம் சாந்தமாய் ஏற்றதுபோல்—அவனை வெளித் தூரத்து, நாமிறங்கணும் நம் காரியத்தில்—பின் சொல்லுகிறேன்—இன்றேல் இடுக்கண் எழுப்புவன் பிடாரன்! தன் மூட்டை முடிச்சு பெட்டி பேழைகளையும் முதுகிலேற்றியும், கையில் நாற்றியும் கழுதையைத் துறைக் கோட்டுகிறேன். (வலதறைக்குத் தாண்டையில்)

குஞ்சுகுரல்:—ஏண்டா—வெளியிலிருந்து வந்தவனை விரட்டுவதோ—எங்கொளித்திருக்கிறாய் அம்மாவை?

உரு:—ஈரப் புடவையை மாற்றி வேறு உடுத்திக் கொள்ள உள்மறைந்துள்ள்—வருவள் பாரிப்போ—சற்றுப் பொறு!

துரை:—பொம்மையல்ல—மெய்ம்மையே!

[குஞ்சு இடதிருந்து வருகிறான்.]

குஞ்:—பொறுத்துப் பொறுத்துப் புழுத்தேன் ...விளக்கு! விளக்கு! தீப்பெட்டியே நனைந்து பாழ்த்தது. மின்னல் பளீக்காதா? இருள்கீறிவிளக்கிட?

உரு:-(ஆபிசறைக்கதவுகளை, மெல்லத்திறந்து)ஏ-கைதி! என் சொல்கிறாய்—சாளரத்தருகுற்று ஒட்டும் ஒற்றும் கேட்கிறாயா—

குஞ்:-இங்குதானே-உள்ளே அடைத்துளாய் அவளை

உரு:-சாமியாரே-காணேமவளை— ஓட்டம்பிடித்துவிட்டாள்.

துரை:—எப்படி— நன்கு துருவிப்பார்.

குஞ்:—நான் தேடுகிறேன்...ஐயையோ!

உரு:— இருட்டு; பூதம், பேய்!—மிரண்டுகொள்வாய்—உள் நுழையாதே—மின்னல்? ஆகா—அங்குப் படுத்திருக்கிறானு? அடே, எழுந்திரு! நமஸ்காரம் செய்தது போதும்—மனமிரங்கினேன்-வா-வெளியே-மாட்டாய்? என்ன விழித்துப் பார்க்கிறாய்--வந்திருக்கிறேன் நான்—மட்டு மரியாதையின்றிக் கால் நீட்டிப் படுக்கையா—(அனைவரோடிரவர்)

துரை:—தூங்குகிறானு? பாசாங்கு! இங்கு நாம் பேசுவதைக் கேட்கப்போனும்—சதிசூழ்கிறோமா?

குஞ்:—விளக்கெடுத்து வருகிறேன்......

[தியாகுவை உருமபிள்ளை வெளியே பிடித்திழுத்து வருகிறான்]

உரு:—ஊமை! பேசடா—என்ன செய்கிறாய்?

தியா:—என்ன விளங்க வில்லையே (சிரிக்கிறான்) குஞ்சு!

குஞ்:—ஏன் இன்னும் நீ புடவை உடுத்தவில்லை—தாமதமேன்...ஏன் இந்த வேடமும் வேஷ்டியும்?

தியா:—இன்னும் ஈரம்—ஏன் நீ பாவாடை மாறவில்லை.

குஞ்:—அம்மாவைத் தேடினேன்—இங்கும் அங்கும் எங்கும்-அந்தப் புத்தகத்திலிருந்தாள்.

தியா:—ஏன் அழுகிறாய்—சொல்லு—

உரு:—எனக்குப்பதில் நீ சொல்லு—முதலில்!

தியா:—காது செவிடு நான் இதோ—(காதுகளிலடைத்திருக்கிற பஞ்சுகளை எடுத்துச் சிரிக்கிறான்).

குஞ்:—நான் உன்னைக் கூவுவது, இதனாலல்லவோ—செவிபுகவில்லை—காதுவலியா?

தியா:—என்னை இவர்கள் சிறைப்படுத்திய பின்னர்—சன்னலூடே அன்னார் பேசும் சிலமொழி காதூர்ந்தன—கேட்கல் ஆகாதென்று செவிட்டிக்கொண்டேன் என்னை நானே.

துரை:—பொய்—பொய்!

உரு:—கடைசி நீ கேட்ட பேச்சென்ன?

காமா:—ஏழ்மை சூழ்கிறது தாழ்மை என்றுஏழைகளை இழிப்பது கேட்டேன்—காதில் குத்திற்று—வலிக்கு மருந்து போட்டுக் கொண்டேன்.

குஞ்:—இப்பொழுது ஆறிவிட்டதா?

உரு:—மீண்டும் போட்டடைத்துக்கொண்டு புறம் போவானிதோ—மருத்துமனைக்கு—பஞ்சைத் திணித்துக்கொண்டு கிளம்பப்பா விரைந்து! பாட்டிபணித்த கட்டளை பிது—புறப்படு உடனே!

குஞ்:—போகக்கூடாது—மழை!

தியா:—ஈர ஆடையே இதுவும்—மாற்றவில்லை—

உரு:—யார் புத்தகம் அது உன்கையில்? திருட்டா? ஏண்டி நீ பிடுங்கிச் சென்ற புத்தகம் எங்கே?

குஞ்:—அம்மா இருந்தாளே அதுதானே—காணேமே!

தியா:—இதிலன்றோ இருக்கிறாள்-இதோ—பொன்னியின் படம்—நடுவில் வைத்திருக்கிறான் ராஜா—உன் அப்பன்—

உரு:—அவற்றைத்தொட உனக்கென்னஉரிமை சிறை அறையில்—அது என்ன?

தியா:—இந்தியக் குடியரசுப்பட்டா! அன்னை பெசண்டு தயாரித்தது.

துரை:—வண்டிப்பட்டாவோ—பட்டா இன்றேல் வண்டி ஊராதுதான்—உருளை பிரிந்து விடுந்தான்—

உரு:—குடியரசாம்! குடித்துக் குடித்து நீங்கள் வெறிகொண்டு வீழ்ந்தது போதாதா—தள்ளாடுகிறீர், தடுமாறுகிறீர்————

தியா:—குடிப்பதால் கேடே என்றேனும் கக்கிக் கருத்து ஒன்றிறையே—அதே சாலும் எனக்கு—இனி நீ குடிக்கமாட்டாயே?

குஞ்:—அம்மாவைக் காட்டு நீ!

தியா:—இதோ—விளக்கொளியில் காட்டுகிறேன், வா உள்ளே!

உரு:—உள்ளே--போ வெளியே--கொண்டா அதை (புத்தகத்தைப் பிடுங்கி) நட வெளியே-ஓடு.

தியா:—ஆடை யீரத்தை உலர்த்தவோ (சிரிக்கிறான்) வேறு உடுத்திச் செல்லலாமோ, கூடாதோ?

உரு:—பறிமுதலாகிவிட்டது, பாட்டியைக் கேட்க வேண்டும்; உத்தரவு தரமாட்டாள்—எனினும் விண்ணப்பம் செய்துபார்.

தியா:-மண் அப்பம் கூட அருளாள், விண்ணப்பமா—சமையலே அறியாளே—பணியாரங்கள் பண்ணத் தெரியுமே.

உரு:-திட்டுகிறாயா அவளை! சாமியாரே—நீங்களே சாட்சி!

காமாக்ஷி குரல்:—நானும் சாட்சி நிற்கிறேன்,—என்ன கேட்சி காட்சி இங்கே?

தியா:—விளக்கை இங்குக் கொணர்க!

உரு:—உன் வேலைக்காரியோ?

[காமு ஹாரிகேன் விளக்குகள் இரண்டொடு வருகிறாள்]

தியா:—ஒளி கொணர்வது ஞானிகள் தொண்டு—ஏவலாளர் தொழிலல்ல! பெரும்பணி!—என்ன சாமியாரே!

குஞ்:—புத்தகத்தைக் காட்டு—அம்மாவைப் பார்க்கிறேன்.—

காமா:—முன் பிடுங்கி ஓடினாயே—அதா?

உரு:—காட்டுகிறேன் — விளக்கை நந்துகிறேன் முதலில் (திரி இறக்கி விளக்கவித்து) ஐயையோ!

தியா:—வேணுமென்றே—தெரியாதா எனக்கு?

குஞ்:—அந்த விளக்கில் காட்டு!

உரு:—இதனைச் சாக்கிரதையாய்த் தூண்டுகிறேன்.

துரை:—மிகவும் நிவந்திடின் சீறிப் புகையும்—கண்ணாடி மழுங்கிக் கருகி மங்கொளியும் இருட்டொளியுமே.

தியா:—ஓகோ—ஆம்—இருட்டும் ஒளியே!

காமா:— நான் உயர்த்துருட்டுகிறேன் திரியை (சிறிதாக்கி அவிக்கிறாள்.)

தியா:—குஞ்சு—அழாதேம்மா - நான் துணை காப்பேன். இருவர் மனமும் ஒன்று—ஒத்து ஒழுகுகின்றனர்—சாமியார்கூடப் புகைக் கஞ்சினாரன்றோ?

காமா:—அவன் நாவைக் கத்தரி, உருமபிள்ளை—பழி தூற்றுகிறான்.

தியா:—காற்றுச் சிறிது மில்லையே — இப்போது (சூழச் சுற்றிப்பார்த்துச் சிரிக்க.)

காமா:—நாட்டுப் பெண்ணை நான் படாதன படுத்தினேனும்.

உரு:—நாட்டுப் பெண்ணு—மாட்டுப் பெண்ணு!

துரை:-நாட்டுப்பெண் என்பதே இலக்கணமொழி.

தியா:—மாட்டுப் பெண்ணே இலக்கியமொழி—மாடுகள்போல் உழைத்து உழுது சாவதால்—

காமா:—பார்த்தீர்களா-ஓர்ந்தீர்களா? சமையலறையிலேயே—

தியா:—மாட்டுத் தொழு வருகாமையிலே......

காமா:—அடைத்துப் புழுக்கினேனும் புகையிலும பொங்கனலிலும். பிறர் வயிற்றை நிரப்பும் பணியில் மாட்டி அவள் வயிற்றைக் காலி கிடத்தினேனும்! படிப்புக்கு நேரமோ வசதியோ அளிக்காமல் நான், அவள் மனதிலே பாழ்த்தரிசும் சுரையும் சள்ளியும் பரத்தினேனும்!

துரை:—எப்பொழுது இப்படி பழித்தான்?

காமா:—உடுத்தவோ—அவளது செல்வப் பட்டுச் சேலைகளைப் பெட்டியிலிட்டுப் புதைத்துக் கரையானுக்கு இரை அருத்தி. என் கந்தலையும் கைனிக்கிழிசலையுமே அவள் அரையில் மாட்டிக் கால்மானமும் மூடவில்லையாம்! புகைகளைக் கிளப்பி, கண்ணைக் குத்திக் கிழித்து நோண்டி உகுத்தேனும்! உடலிலே அடல்திடம் வலிவு சிறிதும் தேங்காமல் கசக்கிப் பிழிந்து எலும்பைச் சக்கையாய்க் கொலுகாட்டினேனும்!

தியா:—சொற்பொழிவே சொற்பொழிவு.இப்பொருள்பட நான் புகார் புகன்றிருப்பினும், பொருளணியும் சொல்லணியும் தலைசிறந்து இத்துணை அழகுற, சித்தரஞ்சன்போன்றும் நேருவை நிகர்க்கவும்பேசிலன்—பேசும் திறனிலனே-காதிலே, பஞ்சில்லை...மேமேலே.

காமா:—உனக்காக அல்ல—சாமியாருக்காகவே.

குஞ்:—நான் போய் என் விளக்கைக் கொணர்கிறேன்.

உரு:—கூடாது—கண்ணாடி—உடைந்தால்?

காமா:—கையையும் காலையும் கிழித்துக் கொள்ளட்டுமே—பின் பாம்புசீறுமா—பெட்டியில் அடங்கி விடாதா?

குஞ்:—மின்னலுமில்லை, தீக்குச்சியுமில்லை (கொலு அறையில் மறைகிறாள்.)

துரை:—நீங்கள் அடங்கவேண்டாம்!

தியா:—சீறுங்கள்.

உரு:—பின்னர் நச்சுப்பல் உன் சதையில் பாய்ச்சிக் கடித்து மாய்க்க நானிருக்கிறேன்.

தியா:—அவளது நகைகட்டுகளை, அணிந்திடாமல் தடுத்து—பொறாமையால்...

துரை: —பொறாமையேன்—ஓகோ—கனம்பொறுதநால்...

தியா:—கைம்பெண்டுப் பொறுமை.

காமா:—கேட்டீர்களா—கம்மனுட்டிப் பொறாமையாலாம்—அவைகளைத் தொடவும் விடாமல் பூதம் காத்து அவளை ஏழைப் பெண்ணும் ஈழச்சாதியுமாய் ஆழ்த்தி—

உரு:—மேனி அழகைமூடுவதல்லால்—நகைகள்...

தியா:—தம் ஒளிகளால் கதிர் வீசி "இதோ—கழுத்தழகுகாண்!—மார்பு அழகை இங்கு மகிழ். இறைக் கவினைக் காணிங்கே! இடைப் பொலிவை நோக்கிங்கே" என்று தம் வாளொளியால் கண் ஈர்த்துக் காட்டிச் சிலம்புகின்ற மணிநாக்கு உடையவேனும்,மூகைக் கனகமும் கன வெள்ளியும்? ஆம், நகைகள்வீணே!

துரை:—நகைகளை நங்கையர் கழற்ற நேருங்காலை கழுத்தும் காலும் கையும் காட்டுகிற காய்ப்புக்கறுப்! பிடம் கண்டதில்லையா நீங்கள்!

தியா:—சாமியார் கண்டிருக்கிறார்—துறவறம் முன் இல்லறம் இனிது நிகழ்த்தியவர்.

துரை:—நான் கண்டதில்லை—கேள்வியே!

சாமா:—உருமபிள்ளை உரைப்பதே உண்மை—சுபத்திரையின் அழகிற்கு என்ன குறை—நாங்கள் நக்ஷத்திரங்கள் நகாவிடினும்—

உரு:—என்ன சொல்லுகிறாய்—அவள் அழகல்லவா?—உன் கண்கள் உணர்வன அல்ல—

தியா:—ஆம் எனினும் நீ என்னோடு போராடமுனைந்திடா வண்ணம், அழகென்றே ஒப்புக்கொள்கிறேன்.

காமா:—ஒப்புக் கொள்கிறாயல்லவோ—நான் கூறுவன முழுதும் கேட்டால்—

உரு:—சாமியார் காக்கிறார்—நேரமாகிறது—பேச்சளக்கப் போதில்லை—போடா வெளியே...

காமா:—நானும் சமையலில் கை உதவவில்லையாமே. காய்கறி நறுக்கும் அபாயத் தொழிலில் அவள் இறங்கக் கூடாது சிறுபெண்—என்று அன்பும் அங்கலாய்பும் அளியும் அருளும் ஊறி நான்—

தியா:—அறுமாமனை கொண்டே நாட்டுப்பெண் எழுந்த பொறுவெறியால் கொன்றும்விடுவள் என்ற அச்சமும் அயிர்ப்பும் அலைப்பும்...அரட்டிட—

காமா:—தினம் நான்—என் கைவிரல்களில் எத்தனைதரம் காயம்பட்டுத்தவித்துளேன்—கீற்றுக்களும் கோடுகளும் ஆறினும் மறைவதில்லை. என் கை அழகை அழித்தனவே—எனினும்—கடவுளருள் சாட்சியம் சாற்றுமிப்போ — விளக்கேற்று — வா.

உரு:—வேண்டாமிப்போ—

காமா:—ராஜாவைத் தூண்டி—பகை அனற்றி அவனும் பொன்னியைப் பருகிக்குடித்து நலம் உறிஞ்சிக் கொலை செய்தானும்—கேளுங்கள் பழியை!

உரு:—ராணியைப் போதாதென, ராஜாவையுமா—நான் மந்திரி—சும்மா நில்லேன்—போ—காரியமிருக்குது (பிடரி பிடித்துத்தள்ள)

தியா:—ஆம்—காரியமிருக்கு; போகிறேன். பாட்டி இன்றிரவு சாப்பாட்டுக்கு நான் வருவேன் என்று காக்கவேண்டாம்—(வலப்புறத்தில் மறைகிறான்)

காமா:—காக்கவில்லை—துலுக்கஇல்லிலே புலாவும் புட்டியும் காத்திருக்கையிலே இங்கு வருவானேன்?

துரை:—உருமபிள்ளை, சுருட்டுப் பிடிப்பதுண்டல்லவா நீ?

உரு:—உங்களுக்கு வேண்டுமா—

காமா:—சிச்சீ! வேறு ஏதோ யோசனை செய்திருக்கிறார் குஞ்சுவைப்பற்றி!

துரை:—ஆம்—தீப்பெட்டி பையிலிருக்குமே—விளக்கேற்றி இறந்தசென்ற, அழகியின் உருவைக் காட்டு—நான் பார்க்கவேண்டும் சீக்கிரம்!

களவியற் காரிகை

[887-வது பக்கத் தொடர்ச்சி]

இரவிடங்காட்ட லென்பது இவ்வகை வெறும்புனங் கண்டுவருந்திய தலைவன் தோழியை யெதிர்ப்பட்டு இரவுக்குறி வேண்டிய விடத்து அவள் இடங்காட்டுதல். அதற்குச்செய்யுள் வருமாறு:—

பனைவளர் கைம்மாப் படாத்தம்
　　பலத்தரன் பாதம்விண்ணோர்
புனைவளர் சாரற் பொதியின்
　　மலைப்பொலி சாந்தணிந்து
சுனைவளர் காவிகள் சூடிப்பைந்
　　தோகை துயில்பயிலுஞ்
சினைவளர் வேங்கைகள் யாங்கணின்
　　றாடுஞ் செழும்பொழிலே.

—திருக்கோவை—154.

வந்தணங் காமன்னர் தேயமுன்
　　னுள்மறை யேறுயர்த்த
சந்தனங் காமத யானைக்
　　கழல்மன்னன் கார்ப்பொதியிற்
சந்தனஞ் சேர்ந்துதண் காந்தளம்
　　பூந்தழல் போல்விரியும்
கொந்தணங் காம்பிண்டி யாங்கணின்
　　றாடுங் குளிர்பொழிலே.

—பாண்டிக்கோவை.

நறைகமழ் சாந்தமெஞ் சாந்தே பூவும்
பொறைமலி காந்தளம் பூவே யாட்டஞ்
சிறைவண் டார்க்குஞ் செயலை[ய]ம் பொழிலே.

—பொருளியல்.

கள்ளவிழுங் காவி முடித்துக் கமழ்பசுஞ்சாந்
தள்ளி முடிமே வழகெழுதிப் - புள்ளுறங்கும்
வேங்கை மரநிழற்கீழ் நிற்பேம் வியன்சிலம்பா
நாங்கள் விளையாட் டன்கு.

—கிளவித்தெளிவு.

வரவுணர்ந்துரைத்த லென்பது தலைமகற்குக் குறியிடங் காட்டிய தோழி தலைமகளுழைச் சென்று எய்தியவிடத்து அவன்வரவறிந்தமை தோழி சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

முன்னு மிருவ ரிரும்பொழில் மூன்றிற்கு முற்றுமிற்றாற்
பின்னு மொருவர்சிற் றம்பலத் தார்தரும் பேரருள்போற்
றுன்னுமொ ரின்பமென் றோகைதன் றோகைக்குச் சொல்
　　　　　　　　　　　　　　　　　　　　[லுவபோன்
மன்னு மரவத்த வாய்த்துயில் பேரு மயிலினமே.

—திருக்கோவை—160.

பாக்கத் திரவின்கட் பட்டதொன்
　　றுண்டுபைங் கானமெங்கும்
சேக்கைத் துணைத்தலை யோடொன்றுஞ்
　　சேர்ந்தில சேர்ந்துசெங்கை
தாக்கச் சிவந்த தடந்தோட்
　　டபாபரன் றஞ்சையன்னாய்
பூக்கட் கழித்தலைக் கெண்டைமுன்
　　ளோடுண்ட புள்ளினமே.

—அரையர்கோவை.

புள்ளுந் துயிற்புடை பெயர்ந்தன புனலுள்
வெள்ளிதழ்க் கைதை மணிக்காய் ததும்ப
வந்தனன் கொல்லோ தானே
வெந்திற லண்ண னினைந்தனன் விரைந்தே.

—பொருளியல்.

புட்சிலம்பு கின்றமையாற்...பூம்புலம்பி
னுட்சிலம்ப வீழ்கின்ற வோசையாற்—கட்சிலம்பு
கொந்தார் நறும்பொழிலி னுள்ளக் குறியிடத்து
வந்தான்கொல் கள்வ மகன்.

—கிளவித்தெளிவு.

தாய்துயிலறித லென்பது தலைமகன் குறியிடத்து வந்தமை யுணர்ந்த தோழி தாய்துயிலறிதல். அதற்குச் செய்யுள்:—

கூடா ரரணெரி கூடக் கொடுஞ்சிலை கொண்டவண்டன்
சேடான் மதிமலர்த் தில்லையன் னாய்சிறு கட்பெருவண்
கோடார் கரிகுரு மாமணி யூசலைக் கோப்பழித்துத்
தோடார் மதுமலர் நாகத்தைத் தூக்கு[ந]ஞ் சூழ்பொ
　　　　　　　　　　　　　　　　　　　　[ழிற்கே.

—திருக்கோவை—161.

கதஞ்சார் தரும்படைக் கைதவன் காவிரி நாட்டரசன்
பதம்பாழ் படுத்திய பஞ்சவன் கூடற் பதியனையாய்
மதம்பாய் கரவொண்கண் மாமலை யொன்றுகம் வார்பு
　　　　　　　　　　　　　　　　　　　　[னத்து
ளிதண்கால் பறித்திறத் தாளா லுதையு மிரும்பொழிற்கே.

—பாண்டிக் கோவை.

அன்னாய் காணென் றிருமுறை தன்னை
யெடுப்பவுந் துயின்மடிந் திலளே...
இலங்கிலை நெடுவே லண்ணலும்
புலம்புறுய ரகலக் கருதி வந்தோனே.

—பொருளியல்.

இரவுக்குறி யுய்த்த லென்பது இவ்வகைத் தாய் துயிலறிந்த தோழி தலைமகளை யுடன்கொண்டு 'தாழிக்குவளை மலர்ந்தனவேற் காண்பாம்; முல்லை மலர்ந்த வேற் காண்பாம்' எனச்சொல்லிக் குறியிடத்துச் சேறல். அதற்குச் செய்யுள்:—

விண்ணுக்கு மேல்வியன் பாதலக் கீழ்விரி நீருடுத்த
மண்ணுக்கு நாப்ப ணயந்துதென் றில்லைநின் றோன்மிடற்
　　　　　　　　　　　　　　　　　　　　[றின்
வண்ணக் குவளை மலர்கின் றனசின வாண்மிளிர்நின்
கண்ணுக்கு மேற்கண்டு கொண்டு வாழுங் கருங்குழலே

—திருக்கோவை - 162.

ஆழிக் கடல்வையந் தாங்கிய கோனரி கேசரிதென்
பாழிப் பகைவென்ற பஞ்சவன் பைம்பூம் புறவணிந்த
பூழிப் புனமஞ்ஞை யன்னநல் லாய்கொள்கம் போதினியே
தாழிக் குவளைநின் கண்போன் மலருந் தடமலரே.

—பாண்டிக்கோவை.

விளைக்கின்ற பல்புகழ் வேந்தன்
　　விசாரிதன் விண்டெதிர்ந்து
திளைக்கின்ற மன்னரைச் சேவூ
　　ரழித்தவன் றீந்தமிழ்போல்
வளைக்கொன்று கைமங்கை யாசென்று
　　கண்டுநின் வாயுவந்து
முளைக்கின்ற வெள்ளெயிற் றேர்கொண்
　　டலர்ந்தன முல்லைகளே.

—பாண்டிக்கோவை.

கள்ளவிழ் கோதைநின் கண்போற் குவளையு
முள்ளெயிற் றரும்பு முல்லையுங்
கொள்குவம் போதுநங் குளிர்பொழி லிடத்தே.

—பொருளியல்.

நீங்குத லுரைத்த லென்பது குறியிடத்துய்த்த தலைமகளைத் தலைமகன் எதிர்ப்படுமென்று நிலைமைக்கண் தான் நீங்குதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

நந்தீ வரமென்னு நாரண னுன்மலர்க் கண்ணுக்கெஃகந்
தந்தீ வரன்புலி யூரனை யாய்தடங் கண்கடந்த
இந்தீ வரமிவை காணின் னிருள்சேர் குழற்கெழில்சேர்
[ந]ந்தீ வரமுறி யும்வெறி வீயுந் தருகுவனே.

—திருக்கோவை - 163.

ஆய்போ லருளுங் கொடையரி கேசரியம்பொதியில்
வேய்போ லியவிரு தோண்மட வாய்விரைத் தேன்கமழ்
　　　　　　　　　　　　　　　　　　　　[நின்
வாய்போன் மலருங் குமுதங்கள் கொய்து வருமளவும்
நீபோ திவைகொய்து நிற்பது சால நெறியுடைத்தே.

—பாண்டிக்கோவை.

நின்னிணை நீல்விழியி னிறம்புரை நீல
மென்னிரு கரங்கொடு கொய்தியான் கொணர்வன்
அன்னிலை மடவாய் நீவா லரிதே.

—பழம்பாட்டு.

குறியெதிர்ப் படுத லென்பது இவ்வகை குறியிடத்து நிறுத்தித் தோழி நீங்கியவிடத்துத் தமியளாய் நின்ற தலைமகளைத் தலைமகன் எதிர்ப்படுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

காமரை வென்றகண் ணோன்றில்லைப் பல்கதி ரோனடை
தாமரை யில்லி னிதழ்க்கத வந்திறந் தோதமியே [த்த
பாமரை மேகலை பற்றிச் சிலம்பொதுக் கிப்பையவே
நாம்வர யாமத்தென் னோவந்து வைகி நயந்ததுவே.

—திருக்கோவை - 164

வெவ்வினை யார்படை வேந்தர்கள்
　　வெண்மாத் திடைப்படவென்
றவ்வவர் வாழ்பதி கொண்டவன்
　　கூட லகன்பொழில்வாய்ச்
செவ்விரை நாண்மலர்ப் பாதஞ்
　　சிவக்கச் சிலம்பொதுக்கி
யிவ்விருள் வாய்வர வென்னீ
　　நினைந்தனை யேந்திழையே.

—பாண்டிக்கோவை.

மொய்யிருளி னீரே முளரி யகந்திறந்து
செய்ய வடியிற் சிலம்பொதுக்கிப்—பையவொரு
மின்வந்த தென்ன வெறுந்தனியே வந்தவா
வென்வந்து சொல்லீ ரெமக்கு.

—கிளவித்தெளிவு.

அருக்கன் வருவதன்முன் னம்புயப்பூங் கோயிற்
றிருக்கதவ மாரோ திறந்தார்—மருக்கமழ்தார்
வன்னுட நெய்தல்வாய் வல்லியிவ் வல்லிருளில்
என்னுட னீவருவா னிங்கு. —கிளவிவிளக்கம்.

...இவையெல்லாம் இரவுக்குறிவந் தொழுகா நின்ற நாள் அவனாற் செய்யப்படுங் குறியன்றி யல்லகுறிப்பட்டு இற்செறிந்தவிடத்துத் தோழி யவன் வரவுணர்ந்து அவனறியச் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

நாகந் தொழவெழி லம்பல நண்ணி நடநவில்வோ
னாகம் மிதுமதி யேமதி யேநவில் வேற்கையெங்க
ளாகம் வரவெதிர் நாங்கொள்ளு நள்ளிருள் வாய்நறவார்
நாக மலிபொழில் வாயெழில் வாய்த்தநின் னுயகமே.

—திருக்கோவை. - 171.

தாளிணை யாமலர் சூடா வரைசரைச் சங்கமங்கை
வாளின[த்] தால்வென்ற மாறன் றிருக்குல மாமதியெங்
கேளினர் தாம்வரும் போதி னெழாதாய்க் குரலியரோ
நாளினு நீகுறை யாதே விளங்க நலிவின்றியே.

—பாண்டிக் கோவை.

வான்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போதி னெழால்வாழி வெண்டிங்க[ா]ள்
கேள்வரும் போதி னெழாதாய்க் குறுலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்க[ா]ள்.

—பழம்பாட்டு.

அன்னத்தொலி யுரைத்த லென்பது இவ்வகைத் தாம் (புற) [அல்ல குறி]ப்பட்ட படியைத் திங்கண்மேலிட்டுணர்த்திய தோழி யன்னத்தொலி யுரைத்தல். அதற்குச் செய்யுள்:—

மின்னங் கலருஞ் சடைமுடி யோன்வியன் றில்லையன்னா
யென்னங் கலம்வரலெய்தியதோ வெழின்முத்தந்தொத்
　　　　　　　　　　　　　　　　　　　　[திப்
பொன்னங் கலர்புன்னைச் சேக்கையின் வாய்ப்புலம் புற்று
மன்னம் புலம்பு மளவுந் துயிலா தழுங்கினவே. [முற்று

—திருக்கோவை - 172

அறைவா யெதிர்கழல் வேந்துக
　　வல்லத் தமரழித்த
கறைவா யிலங்கிலை வேன்மன்னன்
　　கானலங் கண்ணியன்ன
இறைவா யணிவளை யாயென்கொ
　　லாமிவ் விரவினெல்லாந்
துறைவா யிளம்புன்னை மேலன்ன
　　மொன்றுந் துயின்றிலவே.

—பாண்டிக்கோவை.

வணர்சுரி யைம்பால் வாணுத லரிவை
யவடிற மறிதல் யாவதும்
புணர்துயின் மறந்தன புள்ளினம் பெயர்ந்தே.

—பொருளியல்.

கடலொலி யொலித்த லென்பது இன்று விடிவளவுங் கடலொலி யடங்கியதில்லை யெனச் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

சோத்துன் னடியமென் றோரைக்
　　குழுமித்தொல் வானவர்சூழ்ந்
தேத்தும் படிநிற் பவன்றில்லை
　　யன்னா ளிவடுவளை
வார்த்துன் னமுதுந் திருவு
　　மதியு மிழந்தவநீ
பேர்த்து மிரைப்பொழி யாய்பழி
　　நோக்காய் பெருங்கடலே.

—திருக்கோவை - 173.

அறம்புரி செங்கோ லரிகே சரிதிருத் தானடையார்
பறந்தலை வாய்ப்பட்டு வென்றவன் கூடற் பதியனையா
ணிறந்தவ வாட நிறமுந் திருவு முடனழிந்து
கறங்குவ தென்று மொழியாய் கழியாய் கருங்கடலே.

பாண்டிக்கோவை.

புன்னை நனைப்பினும் பூஞ்சினை தோயினும்
பின்னிருங் கூந்தலென் தோழி நடையொக்கு
மன்னனை யாதி வாழி கடலோதம்.

—பழம்பாட்டு.

புன்னை மலர்தூஉய்ப் புனத்தும் பலிக்கிடந்த
வன்னந் துயிலழித்தா ரார்கொலோ—மன்னன்
மதுரா கனதொண்டி மாக்கடலே சொல்லாய்
முதிரா முலைபயந்த மூன்று.

—பழம்பாட்டு.

நல்லளந் தானு மழுதளந் தானு நகைக்குநல்ல
வில்லளந் தானுதற் கும்வில்லை கேட்கில் விரிதமிழின்
சொல்லளந் தானொரு பாவலர்க் காய்த்துறை யூர்நறையூர்
நெல்லளந் தானளந்த[ா]னெடு நாட்டிற்கு நேர்நிற்குமே.

—நறையூரந்தாதி.

என்னு லிதுசெய்கென் றென்சொல்ல
　　லாமிகல் பாழிவென்ற
மின்னு ரயிற்படைச் செங்கோல்
　　விசாரிதன் வீங்கொலிநீர்த்

தென்னு டெனினுங் கொள்ளார்விலை
யாத்தமர் சீர்செய்வண்டு
முன்னுண் மலரென் றணையுங்க
ணேழை முகிழ்முலைக்கே.

—பாண்டிக்கோவை.

யானெவ னறிகோ வண்ணல் வானெடு
ஞானில முழுவதும் பெறினும்
பேணு ரம்ம விவள்பூண் முலைக்கே.

—பொருளியல்.

[தாது
பூஞ்சுணங்கின் மென்முலைக்குப் பொன்னுலகோ போ
தாஞ்சில சொல்லி நனியெல்லாந்—தீஞ்சொற்
பிறைநுத லுண்ணுட் டமரோ பெரியார்
குறைவிலர் தாங் கொள்ளார் பிற.

—கிளவிமாலை.

கொங்கைக்குந் தூய குலவளைசேர் கோகனகச்
செங்கைக்கு மென்னவிலை செப்புவோம்—மங்கை
தெரியா மருங்குலுக்குத் தேசம்விலை யென்னத்
தரியார் மலைவாணர் தாம்.

—கிளவித்தெளிவு.

உடன் போக்குரைத்தலென்பது... ...இவை பரிசங் கேட்ட தலைமகன் உடன் [கொண்டு]போவது துணிக்தேனெனினும் நிழலு நீருமில்லாத அழல் வெங் கான[மாற்ற] கில்லாள் கொல்லோ வென்னு(ந் தலை) மகற்குத் தோழி சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

பிணையுங்கலையும்வன்பேய்த்தே ரினைப்பெரு நீர்நசையால்
அணையு முரம்பு நிரம்பிய வத்தமு மையமெய்யே
யிணையு மளவுமில் லாவிறை யோனுறை தில்லைத்தண்பூம்
பணையுந் தடமுமன் றேநின்னொடேகினம்பைந்தொடிக்
[கே

—திருக்கோவை-202.

[மால்புரை யானை மணிமுடி மாறன்மண் பாய்நிழற்றும்
பால்புரைவெண்குடைத் தென்னன் பறந்தலைக்கோடி]
[வென்ற
வேல்புரை வெம்மைய கான மெனினுமவ் வேந்தன் செய்ய
கோல்புரை தண்மைய வாநின்னொ டேகினக் கொம்பி
[னுக்கே.

—பாண்டிக்கோவை.

தீயினும் [வெம்மைய] வெங்குவை யாயின்
யாவது மினிய கானஞ்
சேயுயர் சிலம்ப நின்னொடு செலினே.

—பொருளியல்.

மன்னெடு வேலினுய் மாழை மடநோக்கி
நின்னொடு செல்ல நெடுங்கானம்—கொன்னுனைய
வேலன்ன வெம்மைய வாயினும் வேந்தர்செங்
கோலென்ன லாகுங் குளிர்ந்து.

—கிளவிமாலை.

தீய பெருவனமுஞ் செந்தறையு நந்தறையுந்
தூய பெருவனமுஞ் சோலையுமாம்—ஆய
கலம்பா முலைமகட்குக் காமருபூங் கண்ணி
சிலம்பாநின் பின்னர்ச் செலின்.

—கிளவித்தெளிவு.

செலவுடன் படுத்தலென்பது இவ்வகை யுடன்போக்கு நயப்பித்த தோழி தலைமகளுழைச் சென்றுணர்த்த(லை)த் தலைமகன் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

மற்பாய் விடையோன் மகிழ்புலி யூரென் னொடும்வளர்ந்த
பொற்பார் திருநாண் பொருப்பர் விருப்புப் புகுந்துநுந்தக்
கற்பார் நெடுங்கால் கலக்கிப் பறித்தெறி யக்கழிக
இற்பாற் பிறவற்க வேழையர் வாழி யெழுமையுமே.

—திருக்கோவை.-208.

எனு மிகலு மழிந்துதெவ் வேந்தரெல் லாமிறைஞ்சிக்
காணுங் கழனெடு மாறனெங் கோனின்று காக்குமண்
சேணுமென் னேடக லாதுட னுய்த்திரி வின்றிவந்த[மேற்
நாணு மளியத் தகுகற்பு மேற்பட னைகின்றதே.

—பாண்டிக்கோவை.

அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கொம்பி னோங்குமணற் சிறுசிறை
தீம்புன னெரிதர வீந்துக் காங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாதே.

—குறுந்தொகை-149.

சிலரும் பலருங் கடைக்க ணோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டி ரம்ப றூற்றச்
சிறுகோல் வலத்த ளன்னை யலைப்ப
வலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற்
கடுமான் பரியகழ் கதழ்பரி கடைஇ
நடுநாள் வரூஉ மியறேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினல் யானே
அலர்சுமந் தொழிகவிவ் வழுங்க லூரே.

—நற்றிணை-149.

ஊருஞ் சேரியு மலரெழ யாயுந்
தானே யிருக்க நன்மனை யானே
திருந்துவேல் விடலையொடு [வெ]கழீஇ
யருஞ்சுரஞ் சேறல் புரிந்தன[னி]னியே.

—பொருளியல்.

செலவழுங்குவித்தலென்பது இவ்வகை யுடன்செல வுற்ற நிலைமைகண்ட செவிலித்தாய் முதலாயினர்க்கு உரைத்ததற்பின் இவர் நீரிலாரிடைப் போய் வருந்துங் குறையென்னெனத் தோழி தலைமகட்குச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் :—

பாயப் புரவி கடாயன்று பாழிப் பகைமலைந்தார் [லின்வாய்
தேயச் சிலைகொண்ட தென்னவன் றன்றென் பொதியி
வேயொத்த தோளிணை நும்மோடு[வார] விருப்புறுந்தன்
ஆயத் தவரை நினைந்துண்க ணீர்கொண் டலம்வந்தவே.

—பாண்டிக்கோவை.

விளம்பழங் கமழுங் கமஞ்சூற் குழிசி(லம்)
பாசந் தின்ற தேய்கான் மத்தம்
நெய்தே ரியக்கம் வெளின்முதன் முழங்கும்
வைகுபுனல் விடியன் மெய்கரந் தென்கா
லரியமை சிலம்பு கழீஇ நன்மாண்
வரிப்புனை பந்தொடு வைஇய செல்வோள்
இவைகாண் டோறு நோவ மாதோ
அளியரோ வளியரென் னுயத் தோரென
நும்மொடு வரவியா னயரவும்
என்வரைத் தன்றியுங் கலுழ்ந்தன கண்ணே.

—நற்றிணை-12.

எழினுக னும்முட னேகுதல் விரும்பு
மழிவறு மாயத் தவர்களை நினைந்து
விழையினை யெண்ணந் தான்மிகத் தருமே.

—பழம்பாட்டு.

இவையெல்லாம்

'அம்பலு மலருங் களவு'—இறை - 22.

[என்னுஞ் சூத்திரத்துட்] கண்டு கொள்க. தோழியா லாய கூட்டமுடிந்தது. (நக - சஉ)

களவொழுக்க முடிந்தது.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[884-வது பக்கத் தொடர்ச்சி]

6. தூதுவிடு சருக்கம்.

450

நலங்கனி மடந்தையர் நடத்தொறு மிணர்ப்போ
தலங்கல ளகக்கொடி அயற்சுடர வோடி
விலங்குபு ருவக்கொடி முரிந்துவெரு வெய்த
மலங்கின விலங்கின மதர்த்தவவர் வாட்கண். 20.

நலங்கனி மடந்தையர் நடத்தொறும்-அழகு நிரம்பிய அம்மங்கையர் அடிபெயர்த்து நடந்தபோதெல்லாம், அவர்வாள்கண் - அவருடைய வாளைப்போன்ற கண்கள், இணர் போது அலங்கல் அளகம் கொடி அயல்சுடர ஓடி-பூங்கொத்துக்களால் தொடுத்த மாலைகளை அணிந்தகூந்தலுடன் தொடுத்துத்தொங்கவிட்ட மயிர்மாட்டி என்னும் அணியின் பக்கத்தில் ஒளிர ஓடி, விலங்கு புருவம் கொடி முரிந்து வெருவு எய்த-குறுக்கிட்ட புருவக்கடை முரிந்துவிடுமோ என்று அஞ்சி, மலங்கின விலங்கின மதர்த்த - கலங்கினவாய் இங்கும் அங்கும் குறுக்கா ஓடி மதர்த்து விளங்கின.

அளகக்கொடி - 'அளகவல்லி' என்னுமொரு காதணி. அது கூந்தலிற் கோத்துக் காதணியாகிய குழையோடு பிணிக்கப்படும் பொன்சங்கிலி; இதனை இக்காலத்தில் 'மயிர்மாட்டி' என்பர். கீழ் சுயம்வரச் சருக்கம் 196-ம் செய்யுளைப் பார்க்க. வெருவெய்த-வெருவெய்தி, எனமாற்றுக. 'புருவக்கொடி முரிந்து அஞ்ச' என்றும் உரைக்கலாம்.

451

அலத்தக மலைத்தன வடித்தல மாற்றும்
கலைத்தலை மலைத்துவிரி கின்றகடி யல்குல்
முலைத்தலை முகிழ்த்தொளி துளும்பியுள முத்தம்
மலைத்தலை மயிற்குல மருட்டுமவர் சாயல். 21.

அவர் - அவர்களுடைய, அடித்தலம் அலத்தகம் அலைத்தன - பாதங்கள் செம்பஞ்சுச் குழம்புப் பூச்சால் வருத்தமுற்றன. கடி அல்குல் ஆரற்றும் கலைத்தலை மலைத்து விரிகின்ற - விளக்கம் பொருந்திய அல்குல் ஒலிக்கும் மேகாலாபரணத்தின் கடைப்பூட்டு அறும்படி அகன்றன. முலைத்தலை முத்தம் முகிழ்த்து ஒளி துளும்பி உள்ள - முலையின்மீது முத்து மாலைகள் அரும்பையொத்து ஒளிததும்ப விளங்கின. சாயல் மலைத்தலை மயில் கணம் மருட்டும் - மேனியின்மென்மை மலையில்வாழும் மயிலின் கூட்டத்தையும் மயங்கச்செய்யும்.

அலைத்தல் - வருத்தல், 'மலைத்தன' எனப் பிரித்து 'அணிந்தன' என்று உரைத்தலும் ஒன்று. மலைத்து - முலைய, அற்றுக்கெட.

452

கணங்கெழு கலாவமொளி காலுமக லல்குல்
சுணங்கெழு தடத்துணை முலைச்சுமை யிடைத்தாய்
வணங்கியு நுணங்கியும் வருந்திய மருங்கிற்
கிணங்குதுணை யாய்ஞிமி றிரங்கின வெழுந்தே. 22.

கணம்கெழு கலாவம் ஒளிகாலும் அகல் அல்குல் - பல மணிக்கோவையால் அமைந்த கலாபம் என்னும் ஆபரணம் ஒளியைப் பரப்பும்அகன்ற அல்குலுக்கும், சுணங்கு எழு தடம் துணை முலை சுமை - தேமல் பரந்த மலையையொத்த இரண்டாகிய முலையாகிய பாரத்துக்கும்,இடைத்தாய்-நடுவிலிருப்பதாய், வணங்கியும் நுணங்கியும் வருந்திய மருங்கிற்கு - வளைந்தும் தளர்ந்தும் வருந்திய இடையினுக்கு,இணங்கு துணையாக - நட்பிற் பொருந்திய துணையாக, ஞிமிறு - வண்டுகள், எழுந்து இரங்கின - கூந்தலினின்று எழுந்து இரங்கி யொலித்தன.

'கலாபம்' என்பது பதினாறு மணிக்கோவையால் அமைந்த மாதரிடையணி. முலைக்கும் அல்குலுக்கும் இடையே நெருக்குண்டு முலைப்பாரத்தைத் தாங்க மாட்டாது வருந்தும் இடைக்குத் தாமும் கூந்தலிற் படிந்து தங்கி வருத்தலாகாதென்று இரங்கி வண்டுகள் மேலெழுந்து பறந்து ஒலித்தன என்க. இரங்கல் (1) மனமிரங்கல் (2) ஒலித்தல். இங்கே இரட்டுற மொழிதல் என்னுமுத்தியால் இருபொருளும் தந்து நின்றது.

453

முலைத்தொழில் சிலைத்தொழி னுருயிர் முருக்கு
நிலைத்தொழில வென்றுள நினைத்தொழுக வின்பக்
[லாம்
கலைத்தொழில்கள் காமனெய் கணைத்தொழில்க ளெல்
கொலைத்தொழில்கொள் வாட்கணி னகத்தகுறிகண்மீர்

முலைதொழில் - அவர்களுடைய தனங்களின் செய்கை, சிலை தொழிலினுர் உயிர் முருக்கும் - வில்வீரருடைய் உயிரையும் அழிக்கும்,நிலைதொழில என்று-நிலைத்த தன்மைத்தாகிய தொழிலை உடையன என்று, உளம்நினைத்து ஒழுக-கண்டாருடைய மனம் எண்ணி ஒழுகுமாறு, இன்பம் கலை தொழில்கள் - காம நூலிற் சொல்லப்பட்ட சுரதச் செயல்களும், காமன் எய்கணைத்தொழில் - மன்மதன் எய்யும் அம்புகளின் தொழிலும், எல்லாம் - முழுதும், கொலை தொழில் கொள் வாள் கண்ணின் அகத்த - கொலையைச் செய்ய வல்ல வாள்போன்ற கண்ணினிடத்தே அமைந்து உள்ளன. குறிகண்மீர்-இதைக் குறித்து உணருங்கள்.

454

துடித்ததுவர் வாயொடு துளும்புநகை முத்தம்
பொடித்தவிய னீரொடு பொலிந்தசுட ரோலை
அடுத்ததில கத்தினொ டணிந்தவள கத்தார்
வடித்தசிறு நோக்கொடு முகத்தொழில் வகுத்தார் 24.

அணிந்த அளகத்தார் - ஒப்பனை செய்யப்பட்ட கூந்தலையுடைய அவர்கள், துடித்த துவர் வாயோடு-துடிக்கும் பவளம் போன்ற இதழ்களோடு கூடிய வாயாலும், துளும்புநகை முத்தம் பொடித்த வியன் நீரோடு - ஒளிதுளும்பும் பற்களாகிய முத்துக்களினின்று எழுந்த மிக்க காந்தியாலும், பொலிந்த சுடர் ஓலையொடு - விளங்கும் பிரகாசத்தை உடைய காதோலையாலும், அடுத்த திலகத்தின் ஒடு - நெற்றியிற் பொருந்திய திலகத்தாலும்,வடித்த சிறு நோக்கு ஓடு-திருந்திய கடைக்கண் பார்வையாலும்,முகம்தொழில்

188941

வகுத்தார் - (ஆடவரை மயக்கும்) முகத்தொழில் அமைந்தவராக விளங்கினர்.

455

பூவிரி குழற்சிகை மணிப்பறவை போகா
ஆவிகொ ளகிற்புகையுள் விம்மியவ ரொண்கண்
காவியென வூதுவன கைத்தலம் விலங்க
மேவியிவை காந்தளென வீழ்மிக நொந்தார். 25.

மணி பறவை - கருவண்டுகள், அவர் - அவர்களின், பூ விரி குழல் சிகை போகா—பூக்கள் விரிந்த கூந்தல் முடியிற் படிந்து, ஆவிகொள் அகில் புகையுள் விம்மி - வாசனையை யுடைய அகிற்புகையுள் ஒலித்துத்தங்கி, ஒண்கண் காவி என ஊதுவன - ஒளி பொருந்திய கண்களைக் கருங்குவளை மலரென்று கருதிக் குடைபவைகளை, கைத்தலம் விலங்க - அவருடைய கைகள் தடுத்தோட்ட, இவை காந்தள் என - இவற்றைக் காந்தளென எண்ணி, மேவி விழ-விரும்பி விழுவதினுல், மிக நொந்தார் - (பலவாறு) அவர்கள் மிகவும் நொந்தார்கள்.

மணி - நீலமணி, ஆவி - வாசனை, 'ஆவிகொள்' என்பதற்கு 'ஆடவருயிரைக்கவரும்' என்றும் உரைக்கலாம். விம்முதல் - ஒலித்தல் (பிங்கலந்தை). விலங்க - குறுக்கே சென்று தடுக்க. (புறம், 169, 250).

456

சுரும்பொடு சுழன்றுள குழற்றொகை எழிற்கை
கரும்பொடு கலந்துள களித்தவர் தீம்பண்
நரம்பொடு நடந்துளர் விரற்றலை யெயிற்றேர்
அரும்பொடு பொலிந்ததுவர் வாயமிர்தம் அன்றே.

அவர் - அவர்களின், குழல் தொகை சுரும்பொடு சுழன்று உள்ள - கூந்தலின் தொகுதி வண்டுகள் சூழப்பெற்றனவாய் இருந்தன; எழில் கை கரும்பொடு கலந்துள - அழகிய கைகள் கரும்பின் இயல்பைக்கொண்டு விளங்கின; நரம்பொடு நடந்து உளர் விரல் தீம் பண்தலை - வீணையின் நரம்பைத் தடவி இசைக்கும் விரல் எழுப்பும் இனிய பண்ணின் சுவையைக்காட்டிலும், எயிற்று ஏர் அரும்பொடு பொலிந்த-பற்களாகிய அழகிய முல்லையரும்புடன் பொலிந்த, துவர் வாய் அமிர்தம் களித்தது - செவ்வாயின் அமிர்தம் களிப்பைச்செய்தது. அன்றே - அல்லவோ.

457

கணங்குழை மடந்தையர் கவின்பிற ழிருங்கண்
அணங்குற விலங்குதொ றகம்புலர வாடி
மணங்கம ழலங்கலுடை மைந்தர்தம் மனந்தாழ்
வணங்கிடை வணங்குதொ றணங்கென வணங்கும்.

மணம்கமழ் அலங்கல்உடை மைந்தர் அகம் - வாசனையை வீசும் மாலையை அணிந்த மைந்தருடைய உள்ளம், கணம்குழை மடந்தையர்-பலவாகிய குழைகளை அணிந்த அம்மங்கையருடைய, கவின்பிறழ் இரும் கண் அணங்கு உற விலங்குதொறு - அழகு விளங்கிய கரிய கண்கள் பிறருக்குத் துன்பமுண்டாகுப்படி அங்குமிங்கும் உலவிப் பிறழும்போதெல்லாம், புலரவாடி-வருந்தித் தளர்ந்து, தம் மனம் தாழ் வணங்கு இடை வணங்குதொறு- தம்முடைய மனம் மிக விரும்பி விழும் அவருடைய வளைந்த இடை துவண்டுவளையும்போதெல்லாம், அணங்கு எனவணங்கும் - அவரைத் தெய்வமகளிரென நினைத்து வணங்கும்.

'அகம் புலரவாடி வணங்கும்,' என வினைமுடிக்க. தாழ்தல் - ஆசைப்பெருக்கம். (சூளா. நிகண்டு).

458

நெய்யலர் குழற்றொகை நெருப்பினடும் என்பார்
மையலர் நெடுங்கணிவை வல்லகொலை என்பார்
தொய்யிலிள மென்முலையி னீர்சுடுதி ராயின்
உய்யலம் எனத்தொழுது மைந்தர்க ளுடைந்தார்.28.

மைந்தர்கள்-ஆடவர்கள், நெய் அலர் குழல்தொகை நெருப்பின் அடும் என்பார் - புழுகுநெய் பூசிய கூந்தலின் தொகுதி நெருப்பைப்போல நம்மைச் சுட்டெரிக்கும்என்று சிலர் சொல்லுவார்; மை அலர் நெடுங்கண் இவை கொலைவல்ல என்பார் - மைதீட்டிய இந்த நெடியகண்கள் கொலைசெய்வதில் வல்லனஎன்று சிலர் சொல்லுவார்; தொய்யில் இளம் முலையினீர் - சந்தனக்கோலம் எழுதப்பெற்ற இளமையான மெல்லிய முலைகளை உடையவர்களே, சுடுதிர் ஆயின் - நீர் இவ்வாறு எம்மைச் சுடுவீராயின், உய்யலம் - நாங்கள் உயிர்பிழைத்திருக்கமாட்டோம், என தொழுது உடைந்தார்-என்று தொழுது நைந்து உருகினர்கள்.

நெய் - கூந்தலுக்குத் தடவும் புழுகுநெய். தொய்யில் - முலைமேலும் தோள்மேலும் சந்தனக்குழம்பாலேனும் குங்குமக்குழம்பாலேனும் பல வடிவங்களை எழுதி அலங்கரித்தல். முலையின் நீர் சுடுதிராயின், எனப் பிரித்து, முலையினுல் நீங்கள் சுடுவீராயின் எனப் பொருள்கொள்ளலும் ஒன்று.

(வேறு)

459

நாம நூற்கலை விச்சையின் னன்னெறி யிவைதாம்
தாம நீள்குழற் றளர்நடை யுருவுகொண் டனையார்
வாம மேகலை மடவர லிவர்களை வளர்த்தார்
காம நூலினுக் கிலக்கியங் காட்டிய வளர்த்தார். 29.

நாம நூல்கலை விச்சையின் நல்நெறி இவைதாம் - (கற்கவிரும்புவார்) அஞ்சும்படி விரிந்த பல கலாசாத்திரங்களிலுள்ள வித்தைகளின் நல்ல நெறிகள்யாவும், தாம நீள் குழல் தளர் நடை உருவு கொண்டு அனையார்-மாலையைச்சூடிய நீண்டகூந்தலையும் தளர்ந்தநடையும் உடைய பெண்களின் உருவைக் கொண்டாற்போன்றவராகிய, வாமம் மேகலை மடவரல் இவர்களை வளர்த்தார் - அழகான மேகலாபரணத்தை அணிந்த மங்கையர் இவர்களை(ப் பெற்று) வளர்த்த தாய்மார், காமநூலுக்கு இலக்கியம் காட்டிய வளர்த்தார் - காம நூற் சொல்லிய இலக்கணங்களுக்கு இலக்கியமாகவே இவர்களை வளர்த்தார் போலும்.

காம நூற்கலை விச்சை - அறுபத்து நான்காகிய கலாசாஸ்திரங்கள்.

460.

இனிய வீங்கிய விளமுலை யிவர்களை வளர்த்தார்
பனியின் மென்மல ரலர்ந்தன வுவகையிற் பயில்வார்
கனிப வேலிவர் கடல்வினை யமிர்தெனக் கனிவார்
முனிப வேலிவ ரனங்கனைங் கணையென முனிவார். 30

இனிய வீங்கிய இளம்முலை இவர்களை வளர்த்தார்- இனியவாய்ப் பருத்த இளமைவாய்ந்த முலைகளையுடைய இவர்களை வளர்த்தவர்கள், பனியின் மென் மலர் அலர்ந்த அன்ன - பனியினுல் மெல்லிய மலர்கள் அலர்ந்து விளங்கினுற் போல், உவகையில் பயில்வார் - எப்பொழுதும் மகிழ்வுற்று இருப்பார்கள். (ஏனெனில்) இவர்-இவர், கனிபவேல் - மனம் இளகுவாரானுல், கடல்வினை அமிர்து என கனிவார் - பாற்கடலிலே உண்டான அமிர்தத்தைப் போல இளகுவார்கள்; முனிபவேல் அணங்கன் ஐங்கணைஎன முனிவார்- கோபிப்பாரானுல் மன்மதனுடைய பஞ்சபாணங்களைப் போலக் கோபிப்பார்கள்.

யாப்பிலக்கணம்

செய்யுள்—கலிப்பா

[898-வது பக்கத் தொடர்ச்சி]

கொச்சகக் கலிப்பாக்களில், தாழிசை மாத்திரமேனும், தாழிசையினேடு தனிச்சொல்லும் சுரிதகமும் சேர்ந்தேனும் வருமாயின், அது தாழிசையொருபோகு என்று வழங்கப்படும் என்பதைக் கூறி அதற்கு உதாரணமுங் காட்டினேம். இனி அம்போதரங்க வொருபோகிற்கும் இரண்டொரு உதாரணம் காண்போம். இவ் வொருபோகுகொச்சகக்கலிப்பாக்களின் இலக்கணம் ஒருவழி வரையறுக்கப்பெற்று நிற்கவில்லையாயினும், தரவு தாழிசை என்னுமிவ் விரண்டு உறுப்புக்களில் ஒன்று நீங்கி வருவனவற்றைப் பொதுவாக ஒருபோகுகளென்றும்; தரவு இன்றித் தாழிசை மட்டுமேனும், தாழிசையும் தனிச்சொல்லும் சுரிதகமுமாகவேனும் வருவனவற்றை முன்குறித்தபடி தாழிசை ஒருபோகென்றும்; தரவேனுந் தாழிசையேனுமிலதாக அம்போதரங்க உறுப்புமிகுந்து வருவதை அம்போதரங்க வொருபோகென்றும்,தரவேனும்தாழிசையேனும் இலதாகஅராகவுறுப்பு மிகுந்து வருவதை வண்ணக ஒருபோகென்றும், ஒருவாறு வழங்கலாம் என நினைக்கின்றேம்.

12. அம்போதரங்க வொருபோகு.

தாழிசை

1

கரைபொருநீர்க்கடல்கலங்கக் கருவரைமத் ததுவாகத்
திரைபொருது புடைபெயரத் திண்டோளாற் கடைந்
[தனையே;
[பெயர

2

முகில்பொரு துடல்கலங்க முழவுத்தோள் புடை
அகல்விசும்பி னமரர்க்கு மாரமுதம் படைத்தனையே;

3

வரைபெரிய மத்தாக வாளரவங் கயிறாகத் [தனையே;
திரையிரியக் கடல்கடைந்து திருமகளைப் படைத்

அராகம்

அமரரை யமரிடை யமருல கதுவிட
நமராது புகழ்மிக மிகவிக லடுத்தனை.

அம்போதரங்கம்

அளவெண் :—

1. அலைகட லுலகமு மந்தணர்க் கீந்தனை.
2. உலகொடு நிலவிய வொருபுகழ் சுமந்தனை.

இடையெண் :—

1. ஆதிக்க ணரசெய் தினை.
2. நீதிக்கண் மதிநிரம் பினை.
3. விளங்கெரி முதல்வேட் டனை.
4. துளங்கெரி யவர்புகழ் துளக்கினை.

சிற்றெண்:—

1. அலகு நீ. 2. உலகு நீ. 3. அருளு நீ. 4. பொருளு நீ.
5. நிலவு நீ. 6. வெயிலு நீ. 7. நிழலு நீ. 8. நீரு நீ.

தனிச்சொல்

எனவாங்கு

சுரிதகம்

பவழ மெறிதிரைப் பரவைக் கோவே
புகழ்துறை நிறைந்த பொருவே னந்தி
உலகுட னளந்தனை நீயே
உலகொடு நிலவுமதி புதபவரை யொத்தே.

இப்பாட்டில் தரவின்றித் தாழிசை உளது. ஈரடி அராகம் ஒன்று இருக்கின்றதேனும் அம்போதரங்க உறுப்பு மிகுந்திருப்பதுபற்றி இது அம்போதரங்க ஒருபோகு என அழைப்பதற் குரியதாகின்றது.

அம்போதரங்க ஒருபோகிற்கு, 'மாறன் பாப் பாவினம்' என்னும் நூலுடையார் காட்டுமோர் உதாரணத்தையும் இங்குத் தருகின்றேம்.

தரவு

மணிமல்கு துறைத்திருப்பாற் கடனடுவண் வரியரவி
னணிமல்குமமளியின்மே லறிதுயில்கொள்வுழிமதமா
வழுங்கஞர்கூர்ந் தழைத்தகுரற் கலர்மடந்தை முகுள
[முலைக்
கொழுங்களபத் தினிலழுந்திக் குழைதிருமார் பையு
[நெகிழ்த்தும்
பூங்கழல்வன் னிலத்துறைப்பப் பொலந்துகில்சுற்
[றவிழவிருள்
தூங்குநறுந் துணர்க்குஞ்சி சுவற்புரளத் துணைத்
[தோளால்
தாங்குகது ழணைக்கொடுதாய்த் தாயிடங்கர் முரண்
[முருக்கித்
தேங்கமலத் தடம்புடைசூழ் தென்னரங்கத் தமர்ந்து
[ளாய்

தனிச் சொல்

ஆங்கும்

கொச்சகம்

1

ஆன்ற கதிர்போன் றனுக்கடொறும் வீற்றிருத்தல்
சான்றவமெய்ஞ் ஞானந் தரிப்ப வுலகனைத்து
மீன்றருணின் மாயை யினைத்தெருளா தேயிறப்பை
தோன்றுவைநீ யென்பதெவன் சொல்.

2

கற்பனசால் கோதமனுற் கற்படிவங் கைக்கொண்டாள்
சற்படிவ மாகியதைத் தாட்டா மரைதருதாள்
பொற்படிவஞ் செய்ததுனூர் போன்ம்.

3

முருந்தி னகையாண் முறுவலிப்பப் பூந்தா
ளிருந்தை யதனை யிளவரச தாக்கிப்
பொருந்த வளித்ததுனூர் போன்ம்.

தனிச் சொல்

அஃதான்று

கொச்சகம்

4

அணங்கொருத்தி தன்னை யளித்தியென வென்னுற்
றணந்தவனிற் கென்னத் தணந்தவனை நோக்கப்
புணர்ந்தவரே யல்லாதப் புண்ணியன் காணுத
துணர்ந்திலரோ மூடமுணர்ந் தோர்.

5

காத்தலா லுந்திக் கமலமல ரண்டமெலாம்
பூத்த திறமறியார் போன்ம்.

அராகம்

1. துறவற முதலிய துரிசற வருளினை
னறமலி முதல்வரை யருளிய தமிலை;

2. திவமுறு சிறுவர்க ளறவரோ டிருவரை
யவன்வயி னடைவினி லருளிய தறிகிலா.

அம்போதரங்கம்

சிற்றெண் :—

1. தாதை யாதலும். 5. புதல்வ னாதலும்.
2. பேதை யாதலும். 6. அறிவ னாதலும்.
3. பெரிய னாதலும். 7. சிறிய னாதலும்.
4. கரிய னாதலும். 8. செம்மை யாதலும்.

தனிச்சொல்

உணர்கிலா

சுரிதகம்

கன்றொடு சிறுவர் கடைசுயி றணிகுணில்
கொன்றையந் தீங்குழல் கொடுமல ரயனெழு
மவ்வுழி யவையவை யவரவர் தெருளுற
வெவ்வுரு வழுமா வினதுரு வழியா
திருப்பவும் வியாத்தியெய் தியதுணர்ந் திலரா
லற்புதன் மாயை யழிவிலாக் கருணைய
சிற்குண நினைத்தெருட் டினரே
யெற்கிறை யெனமனன் மதித்ததிப் போதே.

இதனில், தரவு உளது. எனினும் தாழிசையில்லை. அதற்குமாறாகக் கொச்சகம் என ஐந்து வந்திருக்கக் காண்க. வெண்பாக்களாயமைந்த அவ்வைந்து கொச்சகமும், பரிபாடல் என்னும் பாட்டிற்குரிய உறுப்பு. அதைப்பற்றிப் பின்னர்க் கற்பீர். ஈரடி அராகம் இரண்டிருப்பினும் அம்போதரங்கச் சிற்றெண் எட்டுவந்திருத்தலால், இப்பாட்டு அம்போதரங்கவொருபோகு என அழைக்கப்பட்டது.

13. வண்ணக வொருபோகு

தரவு அல்லது தாழிசை குறைந்து, அம்போதரங்க உறுப்புக்கள் சிலவரினும், அராகவுறுப்புச் சிறிது மிகுந்து நடக்கின்ற கொச்சகக்கலிப்பாவை வண்ணக வொருபோ கென்பர்.

தரவு.

அகலிடமு மமருலகு மமர்பொருது மறந்தோற்றுப்
புகலிடநின் குடைநிழலாப் புகுமாணம் பிறிதின்றி
மறந்தோற்று நிறங்கருகி மாற்புகழு நிலைதளரப்
புறந்தோற்றுக் கழலார்ப்பப் பொருகளம் வறிதாக
மண்ணுலகு மறிகடலு மாமலையு நிலைகலங்க [தனையே.
விண்ணுலகம் வியப்பெய்த வெஞ்சமத்து ளலைத்

தனிச்சொல்

அதனால்

அராகம்

1. கனைகட லுடைதிரை கரைபொரக் கடைந்தனை.
2. முனைவரு மமரரு முறைமுறை வந்துநின்
னிணைமலர் பளர்புகழ் பயில்வதோர்பண்பினை.
3. மருளுறு துதைகதிர் மணியது மணிநிற
மருளு நின்குடை.
4. குடையது குளிர்நிழ லடைகுண வுயிர்களை
அளிக்கு நின்கோல்.
5. கோலது செம்மையிற் குறைகடல் வளாக
மாலையுங் காலையு மகிழ்தூங் கின்ற.

அம்போதரங்கம்

பேரெண் :—

1. அருயிர்க் கெல்லா மமிழ்தின் றமையா
சீரிது மினிதுநின் னருள்.
2. அருளு மலைகடலு மாயிரண்டு மொக்கும்
இருள்கொடி மேற்கண்டாய் நினக்கு.

இடையெண் :—

1. [illegible]த் தோய் நீ
2. [illegible] மீன்தோய் நீ
3. போரமர்க் கடந்தோய் நீ
4. புனையெரிமுன் வேட்டோய் நீ
5. ஒற்றவெண் குடையோய் நீ
6. கொற்றச்செங் கோலோய் நீ
7. பாதையந் துறைவ னீ
8. பரிபவ ரிறைவ னீ.

தனிச்சொல்

எனவாங்கு

சுரிதகம்

பொருகுடை வளாக மொருகுடை நிழற்றி
இருபிறப் பாளர்க் கிருநிதி யீந்து
மனமகிழ்ந் தருள்புரி பெரும்புக ழச்சுத
கோவே யினையை யாதலிற் பனிமதி
தவழு நந்தி மாமலைச் சிலம்ப
நந்திநிற் பரவுத லவலர்க் கரிதே.

தரவிருக்கத் தாழிசையின்றி அராகவுறுப்பு அதிகமுந் தழுவி வந்தமையால் இதனை வண்ணக வொருபோகு என்பர். தரவின்றித் தாழிசையோடு அராகம் மிகுந்துவரும் வண்ணக ஒருபோகிற்கு உதாரணம் எமக்குத் தென்படவில்லையாதலின் இங்கு வரையாது விட்டோம்.

உறழ்கலி

கொச்சகக் கலிப்பாக்களெல்லாம் நாம் ஒருவாறு வகுத்துக் காட்டிய பதின்மூன்று வகைகளில் அடங்குதல் இயலாது. இந்த இலக்கணங்களுக் கெல்லாம் கட்டுப்படாத பல கொச்சகக் கலிப்பாக்களைக் குறுந்தொகை என்னும் நூலினுள் காணலாம். இவ்வண்ணம் வருவனவற்றில், ஒருவர் கூறுவதும் மற்றவர்மறுமொழி யளிப்பதுமாய்ப் பொருள்நடந்து வருகின்ற பாவினை உறழ்கலி என அழைப்பர். உறழ்கலியில் உறுப்பு வகையறுக்க இயலாமையுடன், ஐஞ்சீரடிகளும், மூன்றுசீர்த் தனியடிகளும், பலபாக்கள் மயங்கியும் வரும் :—

நலமிக நந்திய நயவரு தடமென்றோள்
அலமர லமருண்க ணந்நல்லாய் நீயுறீஇ
உலமர லுயவுநோய்க் குய்யுமா றுரைத்துச்செல்;

பேரேமுற் றார்போல முன்னின்று விலக்குவா
யாரெல்லா நின்னை யறிந்ததூஉ மில்வழி ;

தளரியா லென்னறிதல் வேண்டிற் பகையஞ்சாப்
புல்லினத் தாயர் மகனேன் மற்றியான் ;

ஒக்கும், புல்லினத் தாயனை நீயாயிற் குடஞ்சுட்டு
நல்லினத் தாய ரெமர் ;

எல்லா, நின்னொடு சொல்லி னேதமோ வில்லைமன் ;
ஏதமன், றென்னை வருவான் விடு ;

விடேன், உடம்பட்டு நீப்பார் கிளவி மடம்பட்டு
மெல்லிய லாக வறியினு மெல்லியா
னின்மொழிகொண் டியானோ விடுவேன்மற் றென்
டென்னெஞ்ச மேவல் செயின் ; [மொழிகொண்
நெஞ்சேவல் செய்யா தெனநின்றாய்க் கெஞ்சிய
காதல்கொள் காமங் கலக்குற வேதிலார்
பொய்ம்மொழி தேறுவ தென் ;
தெளிந்தேன் றெரியிழாய் யான்;

பல்கால்யாங் கான்யாற் றவிர்மணற் றண்பொழி
லல்க லகலறை யாயமொ டாடி
முல்லை குருந்தொடு முச்சிவேய்ந் தெல்லை
யிரவுற்ற தின்னங் கழிப்பி யரவுற்
றுருமி னதிருங் குரல்போற் பொருமுரா
ணல்லேறு நாகுட னின்றன
பல்லா னினநிரை நாமுடன் செலற்கே.

இதனில் முதல் மூன்றடிகளைத் தரவென்று கொள்ளின் கொள்ளலாமன்றி மற்ற உறுப்புக்கள் ஒன்றும் வகைப்பட்டு நிற்காமை காண்க.

கந்தபுராணமும் சங்க நூல்களும்.

[896-வது பக்கத் தொடர்ச்சி]

நாற்ற டம்புயக் கண்ணுத னந்தியம் பெருமான்
போற்றி முன்செல வமரரு முனிவரும் புகழ
வேற்ற தும்புரு நாரதர் விஞ்சையர் யாரும்
பாற்றி யக்கமு நீழலு மாமெனப் பாட

கந்தபுராணம் - உற்பத்திகாண்டம், திருக்கல்யாணப் படலம், செய்யுள் 1.

என்பதோர் திவ்யமதுரஞ்சேர்ந்த சிரிய பாசுரமாகும்.

[விசாலமாகிய நான்கு திருத்தோள்களையுடைய நெற்றிக்கண்ணராகிய நந்தியெம்பெருமான் துதித்துக்கொண்டு முன்னே செல்லவும், தேவர்களும் முனிவர்களும் புகழவும், தகுதியாகிய தும்புரு நாரதர் வித்தியாதரர் முதலிய அனைவரும் பருந்தின் இயக்கமும் நிழலு மொக்குமென்று சொல்லும்படி பாடவும்]

[தும்புரு, நாரதர், வித்தியாதரர் முதலியவர்கள் நரப்புக் கருவியாகிய யாழின் சுதியோடு தங்கள் மிடற்றோசையை யமைத்துப் பாடுகின்றவர்களாகலானும் இசைக்குச் சுதி தாயாகலானும் அச்சுதி யில்லாவிடத்து இசைநயந்தராவாகலானும் சுதியோடு பாடினரென்பதைக் குறிப்பிக்கப், 'பாற்றி யக்கமும் நீழலுமாமெனப் பாட', என்று கூறினர். 'பருந்தொடு நிழல்சென்றென்ன இயலிசைப் பயன்றுய்ப்பாரும்' என்றார் பிறரும்...என்பது, கந்தபுராணத்துக்குப் பொழிப்புரை யெழுதிய முத்தமிழ் ரத்நாகரம் ம. தி. பானுகவியவர்களது பொழிப்புரையுடன் கூடிய குறிப்புரை]

இனிச் சங்கநூற் கவிகளை யாராய்வாம்:

பருந்து மதனிழலும் பாட்டு மெழாலும்
திருந்துதார்ச் சீவகற் கேசேர்ந்தன வென்றெண்ணி
விருந்தாக யாழ்பண்ணி வீணைதான் றோற்பான்
இருந்தா னிளமயில்போ லேந்திலைவேற் கண்ணாள்

(சீவகசிந்தாமணி - காந்தருவதத்தையாரிலம்பகம் செய்யுள் 288)

[பகைவர் ஊனை யேந்திய தகட்டு வடிவாகிய வேல்போன்ற கண்களையுடைய தத்தை, பருந்தும் அப்பருந்தின் நிழலும் போன்ற பாட்டும் யாழ் வாசினையும் மாலையாற் றிருந்திய சீவகனிடத்தே விருந்தாகச் சேர்ந்தனவென்று கருதி இளமயிலைப்போல யாழைப்பண்ணி வாசித்து மதுர கீதத்தில் தோல்வியடைய இருந்தனள்) என்பது நச்சினார்க்கினியருரையை யொட்டிய பொழிப்புரை]

[பருந்து பறக்குமிடத்து முறையே உயர்ந்து, அந்நிலத்தின்கண் நின்று ஆய்ந்து பின்னும் அம்முறையே மேன்மேல் உயர்கின்றாற்போலப் பாடவேண்டுதலின், அஃது உவமையாயிற்று]

'சிச்சிலி பூனை குடமுழக்கஞ் செம்மைத்தா
முச்சிலை நீர்விழுக்கா டொண்பருந்து பச்சைநிற
வேயினிலை வீழ்ச்சியுடன் வெங்கா னிழற்பறவை
யேயுங்கா லோசை யியல்பு

என்றார். 'விருந்தாகச் சேர்ந்தன' என்றான், இதற்குமுன்பு பிறரிடத்தில்லாது இவனிடத்தே காண்டலின். வீணை, யென்றது யாழையும் பாட்டையும்.)

இவை இச்செய்யுளின்கீழ் நச்சினார்க்கினியரெழுதியுள்ள விசேடக் குறிப்புக்களாம்.

பாட்டும் யாழ்வாசினையும் ஒன்றற்கொன்று இணைபிரியாத் தொடர்புடையவையாய், வானத்தே மேன்மேலுயர்ந்து ஓரிடத்திலிருந்து நன்கு ஆராய்ந்து மற்றும் அம்முறையே மேன்மேலுயர்கின்ற பருந்தின் தன்மையைப்போல அமைதல் வே[illegible]இத னாற் பெறப்படும்.

சீவகன் இவ்வாறே இசைபாடினான் என்பதை, அடியில் வருஞ் செய்யுட்களாற் கண்டுகொள்க.

அண்ணலியாழ் நரம்பை யாய்ந்து மணிவிரறவழ்ந்த [வாறும்
பண்ணிய விலயம் பற்றிப் பாடிய வனப்பு நோக்கி
விண்ணவர் வீணை வீழ்ந்தார் விஞ்சையர் கனிந்து [நொந்தார்
மண்ணவர் மருளின் மாய்ந்தார் சித்தரு மனத்துள் [வைத்தார்.

வீழ்மணி வண்டு பாய்ந்து மதித்திடக் கிழிந்த மாலை
சூழ்மணிக் கோட்டு வீணைச் சுகிர்புரி நரம்பு நம்பி
வாழ்மணிமிடறு மொன்றாய்ப் பணிசெய்த வாறு [நோக்கித்
தாழ்மணித் தாம மார்பிற் கின்னரர் சாம்பி னாரே

(காந்தருவதத்தையாரிலம்பகம் செய்யுள் 235, 236)

[சீவகனது அழகியவிரல் வீணையிற்பூட்டிய நரம்பினை யாராய்ந்து வாசித்தபடியையும், அதில்தான் பண்ணிய செலவைக் குறிக்கொண்டு கண்டத்தாற் பாடிய அழகையுமுட் கொண்டு கின்னரர்கள் வீணையைக் கைவிட்டார்கள்; வித்தியாதரர்கள் மனமுருகி மெய் சோர்ந்தார்கள், நிலவுலகிலுள்ளவர்கள் தாம் கேட்டறியாமையால் மயங்கி அறிவு கெட்டார்கள், இருடிகளும் இதுவும் ஒரு பேரின்பமாய் இருந்ததென்று மனத்திற்கொண்டனர்)

(மதுவை) விரும்பிய கரிய வண்டுகள் குதித்து மிதித்தலால் அலர்ந்த மாலையினையும் இரத்தினமாலை சூழ்ந்த கோட்டையுடைய வீணையில் சீவிமுறுக்கின நரம்பும், சீவகன் முறையாக அழகிய கண்டமும் ஒன்றாகி யேவல்செய்த வகையை யுட்கொண்டு முத்துமாலை தங்கிய மார்பினையுடைய கின்னரர்கள் மேனி வாடினார்கள்)என்பதாம். (நச்சினார்க்கினியருரையை யொட்டிய பொழிப்புரை)

'பருந்து மதனிழலும் பாட்டுமெழாலும், என்ற அடியினது விரிவான வியாக்கியானம் போன்று, தத்தை வீணை வாசித்தவகையைக் 'களத்துமிடத்துத் திருத்தக்க தேவர் சொல்லியுள்ள பாக்களையும் அவற்றின் விவரமான கருத்துக்களையு மினிப் பழைய உரையாசிரிய ருரைகளுடன் இனிது காண்பாம்.

கிளைத்தொழிற் சிறுநுத றெய்வப் பாவைபோற்
கலைத்தொழில் படவெழீஇப் பாடி னாள்கனிந்
திலைப்பொழில் குரங்கின வீன்ற தூண்டளிர்
நிலத்திடைப் பறவைமெய்ம் மறந்து வீழ்ந்தவே

கருங்கொடிப்புருவமேறா கயனெடுங்கண்ணுமாடா
அருங்கடிமிடறும்விம்மா தணிமணியெயிறுந்தோன்றா
இருங்கடற்பவளச்செவ்வாய் திறந்திவள்பாடினாளோ
நரம்பொடுவீணைநாவினவின்றதோவென் றுணர்ந்தார்

(காந்தருவதத்தையாரிலம்பகம், செய்யுள் 165, 166)

[அம்பேறிட்ட விற்போன்ற சிறியநெற்றியையுடைய தத்தை, தெய்வத்தாற் சமைந்த கொல்லியம் பாவைபோல இருந்து, கலைத் தொழிலாகிய பண்ணல் முதலிய எட்டுமையை யாழினை வாசித்துப் பாடினள். இலைகளையுடைய சோலை புருகி வளைந்தன, தூண்கள் தளிரையீன்றன, நிலவுலகிற் கின்னர மிதுனங்கள் சரீரம் மறந்து விழுந்தன.]

கலைத் தொழிலாவன எட்டு:—

பண்ணல் பரிவட்டணை யாராய்த றைவரல்
கண்ணிய செலவு விளையாட்டுக் கையூழ்
[illegible]ண்ணிய குறும்போக்கு' (சிலப்பதிகாரம், கானல், 1)

(1) பண்ணல்—பாட நினைத்த பண்ணுக்கு இணை, கிளை, பகை நட்பான நரம்புகள் பெபருந்தன்மை மாத்திரையறிந்து வீக்குதல். (2) பரிவட்டணை—அவ் வீக்கின நரம்பை அகவிரலாலும் புறவிரலாலும் கர ணஞ்செய்து தடவிப்பார்த்தல். (3) ஆராய்தல்—ஆரோகண அவரோகண வகையால் இசையைத் தெரி வது. (4) தைவரல்—அநுசுருதி யேற்றுதல். (5) செலவு—ஆளத்தியிலே நிரம்பப் பாடுதல். (6) விளை யாட்டு—பாட நினைத்த வண்ணத்தில் சந்தத்தை விடுத்தல். (7) கையூழ்—வண்ணத்திற்செய்த பாட லெல்லாம் இன்பமாகப் பாடுதல். (8) குறும்போக்கு —குடகச்செலவுந் துள்ளற் செலவும் பாடுதல்

(நச்சினார்க்கினியர் விசேடக் குறிப்புரை)

இனி, சிலப்பதிகாரம் கானல் வரியென்னும் பகுதி யில் இவை குறிக்கப்பட்டிருத்தலை அடியார்க்கு நல் லாரது, (மேற்கோள்களுடன் கூடிய) உரையுடன் நோக்குவாம்.

கட்டுரை

சித்திரப் படத்துட்புக்குச் செழுங்கோட்டின் மலர்புனைந்து
மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்திப்
பத்தருங் கோடு மாணியு நரம்புமென்
றித்திறத்துக் குற்ற நீங்கிய யாழ்கையிற் றொழுதுவாங்கிப்
பண்ணல் பரிவட்டணை யாராய்தல் தைவரல்
கண்ணிய செலவு விளையாட்டுக் கையூழ்
நண்ணிய குறும்போக் கென்று நாட்டிய
எண்வகையா லிசையெழீஇப்
பண்வகையாற் பரிவுதீர்ந்து [விரல்கள்
மரகத மணித்தாள் செறிந்த மணிக்காந்தள் மெல்
பயிர்வண்டின் கிளைபோலப் பன்னரம்பின் மிசைப்படர

(சிலப்பதிகாரம்—கானல்வரி)

(1) வலக்கைப் பெருவிரல் குரல்கொளச் சிறுவிரல்
விலக்கின் றிளிவழி கேட்டும்......
இணைவழி யாராய்ந் திணைகொள முடிப்பது
விளைப்பரு மரபிற் பண்ண லாகும்

(2) பரிவட் டணையி னிலக்கணந் தானே
மூவகை நடையின் முடிவிற் றாகி
வலக்கை யிருவிரல் வனப்புறத் தழீஇ
யிடக்கை விரலி னியைவ தாகத்
தொடையொடு தோன்றியுந் தோன்றா தாகியு
நடையொடு தோன்று நயத்த தாகும்

(3) ஆராய்த லென்ப தமைவரக் கிளப்பிற்
குரன்முத லாக விணைவழி கேட்டு
மிணையி லாவழிப் பயனொடு கேட்டுந்
தாரமு முழையுந் தம்மிற் கேட்டுங்
குரலும் விளியுந் தம்மிற் கேட்டுந்
துத்தமும் விளரியுந் தன்னறக் கேட்டும்
கிளரி கைக்கிளை விதியுளிக் கேட்டுந்
தளரா தாகிய தன்மைத் தாகும்

(4) தைவர லென்பது சாற்றுங் காலை
மையறு சிறப்பின் மனமகிழ் வெய்தித்
தொடையொடு பட்டும் படாஅ தாகியு
நடையொடு தோன்றி யாப்புநடை யின்றி
யோவாச் செய்தியின் வட்டணை யொழுகிச்
சீரேற் றியன்று மியலா தாகியும்
ஈர் ணாகு நிறைய தென்ப

(5) செலவெனப் படுவதன் செய்கை தானே
பாலை பண்ணே திறமே கூடமென
நால்வகை யிடத்து நயத்த தாகி
யியக்கமு நடையு மெய்திய வகைத்தாய்ப்
பதினோ ராடலும் பாணியு மியல்பும்
விதிநான்கு தொடர்ந்து விளங்கிச்செல் வதுவே

(6) விளையாட் டென்பது விரிக்குங் காலைக்
கிளவிய வகையி னெழுவகை யெழாலு
மளவிய தகைய தாகு மென்ப

(7) கையூ ழென்பது கருதுங் காலை
யெவ்விடத் தானு மின்பமுஞ் சுவையுஞ்
செவ்விதிற் றோன்றிச் சிலைத்துவர லின்றி
நடைநிலை திரியாது நண்ணித் தோன்றி
நாற்பத் தொன்பது வனப்பும் வண்ணமும்
பாற்படத் தோன்றும் பகுதித் தாகும்

(8) துள்ளற் கண்ணுங் குடக்குத் துள்ளுந்
தள்ளா தாகிய வுடனிலைப் புணர்ச்சி
கொள்வன வெல்லாம் குறும்போக் காகும்

இவையெல்லாம் ஈண்டு விரித்துரைப்பிற் பெருகும்.

இனி இரண்டாவது செய்யுளின் உரையை வரைவாம் [கரிய ஒழுங்காயுள்ள புருவம் நெற்றியி லேறா, கயல் போன்ற நெடியகண்களும் இமைகொட்டா, அறிய விளக்கம் வாய்ந்த கண்டமும் வீங்காது, வரிசையா யுள்ள முத்தினையொத்த பற்களுந் தோன்றா, பெரிய கடலிற்றோன்றிய பவளம் போன்ற சிவந்த வாயைத் திறந்து இவள் பாடினாளோ? அன்றி யாழ்தான் தனக் குரிய நரம்போடு சாரீர வீணைக்குரிய நாவாலும் பாடி யதோ வென்று அரசர் முதலாயினோர் வருந்தினர்.]

(நச்சினார்க்கினியருரையை யொட்டிய பொழிப்புரை)

இது, பதினொரு வகையிலும் உள்ளாளப் பாட்டுப் பாடுங்கால் இடை பிங்கலையை இயக்கமறுத்து மூலா தாரமுதல் பிரமாந்திரமளவும் இயக்கமாக்கி நடுவு தொழில் வரப் பாடுதலென்றறிக.

உள்ளாளம் விந்துவுட னாத மொலியுருட்டுத்
தள்ளாத தாக்கெடுத்த றன்படுத்தன்—மெள்ளக்
கருதி நலிதல்கம் பித்தல் குடில
மொருபதின்மே லொன்றென் றுரை.

'கண்ணிமையா கண்டந்துடியா கொடிறசையா
பண்ணளவும் வாய்தோன்றா பற்றெரியா—
[எண்ணிலிவை
கள்ளார் நறுந்தெரியற் கைதவனே கந்தருவ
ருள்ளாளப் பாட லுணர்' (இசைமரபு)

(அடியாரது விசேடக் குறிப்புரை)

இனி, 'பருந்து மதனிழலும் பாட்டுமெழாலும்' என்ற சிந்தாமணித் தொடரின் கருத்தை யொட்டி யமைந்துள்ள சிலப்பதிகாரப் பகுதியும் இசைப்பாட் டினமைதியை நன்கு விளக்குதற் குறுதுணையாயிருத் தலின் அதனையும் ஈண்டுக் குறிப்பிடுவாம்.

அவ்வடிகளாவன:—

'தொன்னெறி யியற்கைத் தோரிய மகளிரும்
சீரியல் பொலிய நீரல நீங்க
வார மிரண்டும் வரிசையிற் பாடப்
பாடிய வாரத் தீற்றினின் றிசைக்குங்
கூடிய குயிலுவக் கருவிக ளெல்லாங்
குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை'

(சிலப்பதிகாரம்-அரங்கேற்று காதை)

என்பனவே.

பழையநெறி யியற்கையினையுடைய தோரிய மடந் தை முதலாயினோரும் நன்மையுண்டாகவும் தீமை நீங் கவும் வேண்டித் தெய்வப்பாடல் இரண்டடியையும்பாட (இனிச் சீரியல் பொலிய நீரல நீங்க, வென்பதற்குத் தாளவியல்பு பொலிவுபெற அவதாளம் நீங்கவென்றும் உரை கூறலாம். வாரமிரண்டாவன: ஓரொற்றுவாரம், ஈரொற்றுவாரம் என்னுஞ் செய்யுள்; அவை தாளத் து ஒருமாத்திரையும் இரண்டுமாத்திரையும் பெற்று வரும்) தெய்வப்பாடலின் இறுதியிலே நின்றுகூடி இசையாநிற்கும் கருவிகளெல்லாம் என்றவாறு. (இக்கருவிகள் எவ்வண்ணங் கூடியிசைத்தனவோ வெனின்) வங்கியத்தின் வழியே நின்றது யாழ்ப்பா டல் (எனவே மிடற்று வழியது யாழாகலான், மிடற் றுவழிப் பாடலும் குழல்வழித்தெனக் கொள்க.) யாழ்ப்பாடலின் வழியே அதற்குத் தகத் தண்ணுமை யாகிய மத்தளம் நின்றது; மத்தளக் கருவியின் பின் வழியே குடமுழா நின்றது; முழவொடு கூடிநின்று வாச்சியக் கூறுகளை அமைத்தது ஆமந்திரிகை யென் னுங் கருவியென்றவாறு (ஆமந்திரிகை-இடக்கை. நின்றிசைத்தது கருவியென்னாது ஓசையென்க. அஃ தேல் மிடற்றுப் பாடல் சொல்லிற்றிலரெனின் வாரப் பாடல் பாடியபின்னரெனவே, மிடற்றுப்பாடலு மடங்கும். ஆமந்திரிகையோடு அந்தரமின்றி யென் றது இவ்வாமந்திரிகையோடே முன்சொன்ன குயி லுவக் கருவிகளனைத்தும் பருந்தும் நிழலும்போல ஒன் றாய் நிற்ப என்றவாறு.) (அடியார்க்கு நல்லாருரை)

இக்கருத்தை யொட்டியே, கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடரும் தமது அரிய பெரிய காப்பியமாகிய இராமாயணத்தின்கண் 'பருந்தொடு நிழல்சென்றென் னவியலிசைப் பயன்றுய்ப்பாரும்' எனப் பாலகாண் டம்நாட்டுப்படலத்தில் அருளிச் செய்துள்ளார். (பருந் தொடு அதன் நிழலும் தொடர்ந்து செல்லுதல்போல, இயலையொத்துச் செல்லுகின்ற இராகத்தின் இனி மையை யனுபவிப்பவரும்) என்பது இதன் பொழிப் புரை. 'இயல்'—பாடுதற்குரிய பாடல்.

தோற்பொலி முழவும் யாழுந் தொளைபயில் குழலு மேங்க' என்ற சிந்தாமணித்தொடரில் ஆமந்திரிகையின் இலக்கணத்தைக் கண்டுகொள்க. (தோற்கருவியாய் விளங்கும் மத்தளமும், வீணையும், தொளையமைந்த குழலும் ஒலிக்க) என்பதுபொருள். இம்மூன்றுங் கூடியிசைத்தல் ஆமந்திரிகையாதலால் முறையே கூறி னார். இச்செய்யுளின் குறிப்புரையில் ஆசிரியர் நச்சி னார்க்கினியர் 'குழல்வழி யாழெழீஇத் தண்ணுமைப் பின்னர், முழவியம்பலாமந்திரிகை' என்ற அரியமேற் கோள் காட்டி ஆமந்திரிகையின் இயல்பைத் தெரிவித் துள்ளார்.

'குழலெழீஇ யாழெழீஇத் தண்ணுமைப் பின்னர்
முழவியம்ப லாமந்திரிகை'

என்று கூத்த நூலுடையாருஞ் சொன்னார்' என்று, இறையனாரகப் பொருளில் 40-வது சூத்திர உரைக் கண், சங்கப்புலவர் நக்கீரனார் கூறியவாற்றானும் இத னிலக்கணம் நன்கு போதருமாறுகாண்க.

மிடற்றொலியும் யாழிசையும் ஒன்றற்கொன்று பிரியாதொருமித்திருத்தல் வேண்டுமென்றற்குப் பருந் தையும் அதனை விடாது தொடர்ந்து செல்லும் நிழலை யும் ஒப்புமைகாட்டி எத்துணையோ அரியபெரிய இசைநூற்பிரமாணங்களை நுணுக்கமாகவுந் தெளி வாகவுங் காட்டி நம்மைத் தெருட்டிய சங்கப்புலவர் களையும், உரையாசிரியச் சரபங்களையும் என்று மற வாதுமனத்தகத்தமைத்துப் போற்றுவதேயன்றிமற்றி யாஞ் செயற்பாலது வேறென்னுளது?

—o*=*o—

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்—11. குகப் படலம்.

[895-வது பக்கத் தொடர்ச்சி]

குகனது பாதம் வீழ்தல் குறையிலை பரதற் கம்மா.

"உங்களுடைய தலைவனுருக்கு நண்பர்" என்று முன் வான்மீகத்தில் இயம்பியதையே மீண்டு மற தியால் சுமந்திரன் சொல்லிவிட்டானெனினும், பரதன் மறக்காமல் தன் மறுமொழியை மாற்றிக்கொண்ட தகைமை பொருத்தமொடு பெருமையும் மிக வாய்ந் தது. சுமந்திரன் சொற்கேட்டு, "ஆயின், குகர் என் னைப் பார்க்கட்டும்" என்று தான் இருந்த இடத்தி லேயே அவ்வடனூலில் காட்சிகொடுத்த பரதன், தங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவனுக்குரிய வின யமோடு ஒழுகநினைத்து, "யானே சென்று அவனைக் காண்பேன்" எனக் கம்பர்காவியத்தில் எழுந்தனன். எழுந்து குளிர்கங்கைக் கரைகுறுகின்ற பரதன்தன் திருமேனி நிலைநோக்கித் துண்ணென்ற எயினர்கோன்,

வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்

[மரவுரியை உடுத்தவனும், புழுதிபடிந்த உடம்பையுடைய வனும், நல்ல கலையில்லாத சந்திரன்போல் ஒளியிழந்த முக முடையவனும் காண்கின்ற கல்லும் கசிழும்படி முதிர்கின்ற துயரமுடையவனுமாகிய பரதனைப் பார்த்தஅளவிலே, தன் கையிலிருந்து வில் நழுவிவிழத் திகைத்து நின்றான்]

நின்றதிகைப்புச் சிறிதுநீங்கப் பரதனது தோற்றத்தால் உள்ளங்கரைந்துருகிய குகன்,

நம்பியுமென் னாயகனை
யொக்கின்றா னயலின்றான்
தம்பியையு மொக்கின்றான்
தவவேடந் தலைக்கொண்டான்
துன்பமொரு முடிவில்லை
திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா
ரிழைப்பரோ பிழைப்பென்றான்

[பரதனும் என் நாயகனாகிய இராமனை ஒத்திருக்கின் றான். அவன் பக்கத்திலிருக்கின்றவனும் இலக்குவனை ஒத் திருக்கின்றான். இவன் தவக்கோலம் பூண்டிருக்கின்றான். இவனுடைய துன்பத்திற்கோ ஒரு முடிவு இல்லை. இரா

மன் சென்ற திசையை நோக்கித் தொழுதவண்ணமாயிருக் கின்றான்—நமது நாயகனாகிய இராமனுக்குத் தம்பியராய்ப் பிறந்தவர்களும் பிழை செய்வாரோ]
எனத் தன்னின வேடுவற்குப் பெருமிதம் பெருக உரைசெய்து, "அவன் குறிப்பெல்லாங் கண்டுணர்ந்து வருகின்றேன், நெறியை நீர் காத்து நின்மின்" என விதித்து நாவாயொன்றில் தனியே வந்தடைந்தான்.

வந்தெதிரே தொழுதானை
வணங்கினன் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு
மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத்
தழுவினன் தகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியிலும்
வீற்றிருக்குஞ் சீர்த்தியான்.

தழுவின புளினர் வேந்தன்
தாமரைச் செங்க ணானை
எழுவினு முயர்ந்த தோளா
யெய்திய தென்னை யென்ன
முழுதுல களித்த தந்தை
முந்தையோர் முறையி னின்றும்
வழுவின னதனை நீக்க
மன்னனைக் கொணர்வா னென்றான்.

கேட்டனன் கிராதர் வேந்தன்
கிளர்ந்தெழு முயிர்ப்ப னாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான்
விம்மின னுவகை பொங்கத்
தீட்டரு மேனி மைந்தன்
சேவடிக் கமலப் பூவிற்
பூட்டிய கையன் பொய்யி
லுள்ளத்தன் புகல லுற்றான்.

கம்பசூத்திரமெனக் கழறப்பெறு மிடங்களி லிது வொன்று. இராமன்பால் அளப்பரிய அன்புடைய இருவர் சந்தித்தபோது வினயங்கள் புரிந்த முறை வரலாறு இப்பாசுரங்கள் கூறுகின்றன. தொழுதலும் வணங்கலும் அடிவீழ்தலும் தழுவலும் நிகழ்வன வாக, யார் யாரை எம்முறையில் இவைகளைச் செய் தனர் என்னும் ஐயம் தீருமாறில்லை. செய்யுள்களின் சொற்போக்கை நோக்குங்கால், குகன் வந்தான்-அவனைப் பரதன் கை தொழுதான்-தொழுத பரதனைக் குகன் குனிந்து வணங்கினன்—அவ்வாறு வணங்கிய குகனது பாதங்களில், பிரம்மனும் தன்னை வணங்குதற்குரிய பெருமையுடைய பரதன் விழுந் தான்— அவ்வாறு விழுந்த பரதனை, மேலோர்தம் மனத்திலும் சிரத்திலும் வைத்துப் போற்றற்குரிய குகன் தந்தையினுங் களிகூரத் தழிவி யெடுத்தான்—அவ்வாறு தழுவிய குகன் பரதனை வந்த கருமம் வினவி இராமனைத் திருநாடு சேர்ப்பிக்க வந்துள உத்தமனவன் என்பதை யறிந்ததும் மீட்டும் மண்ணில் வீழ்ந்து பரதனது பாதங்களைப் பற்றிப் புகல லுற்றான்—என இக்காட்சி தொடரவல்லதாகின்றது பரதனே சென்றோர் நாவாய் வேட்டுவன் தாள்களில் வீழ்ந்தன னென்று கொள்வதற்கஞ்சிக் கூசுவோர், சொற்களினமைப்பிற்கும் நிகழ்ச்சியின் இயல்பிற்கும் ஒவ்வாத அநுவயஞ் செய்து வலிந்துரைக்கும் பொருளினால் பரதன்தான் குகனடியில் வீழாமல் காக்க முயல்வதெல்லாம் இன்றியமையாததென எண்ணுதற் கில்லை. 'தோற்றத்தாலும் இராமனுக்குப் பின்பிறந் தோனென்ற முறையினாலும்'கவையிலன் பரதன்'என நினைத்தானாயினும் குகன், "குறிப்பெல்லாங் கண்டுணர்ந்து பெயர்கின்றேன்" என வருதலின் பரதனது எண்ணம் யாதென இன்னும் ஆராய்ந்து தெளிந்து கொள்ளவேண்டும் என்னுஞ் சிந்தையனாகவே அவன் இருக்கின்றான் என்பது நன்கு தெரிகின்றது. ஆதலின் பகையும் நட்புமின்றி யோர் நொதுமலன்போல் குகன் வந்து நிற்க, தன்குலத் தனிநாதற் குயிர்த்துணைவன் இக்குகன் என்பதை முன்னரே சுமந்திரனால் உணர்ந் துள பரதன் கைதொழுதனன். அவ்வாறு தொழுவது கண்ட குகன், இராமன்பால் இவனுக்குப் பகையில்லை என்னும் எண்ணம் பின்னுஞ் சிறிது வலிவடைய, பரதனது கால்களில் குனிந்து வணங்கினன். இராமனுக் குயிர்த்துணைவனாதற்குரிய பெரியனொருவன் தன்தாள் வணங்குதற் காற்றாமல் உள்ளம் நெகிழ்ந்த பரதன் அக்குகனது பாதங்களில் தானும் நெடிது வீழ்ந்தானென்னல் நேரிதே. இது தகவாமோ என்று ஐயுறவாரைத் தெளிவித்தற்கே கம்பர், "தகவுடையோர் சிந்தையினுஞ் சென்னியிலும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்" என்று குகனைக் குறிக்கின்றவர் ஆதல் வேண்டும். தந்தையென்ற சொல்லும் குகனைச் சார்வதே தக்கது. இதன்பின் பரதனது வாய்மொழியால் அவனுடைய இராமபக்தியை யாதும் ஐயமறத் தேர்ந்தவுடன், (முன் தலைவணங்கிய) குகன் இப்பொழுது அடியாற்கடியான் என்னும் பான்மையில் மண்ணில் வீழ்ந்து அவன் பாதங்களைப் பூண்டனன். "மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்" என்பதால், முன்னரும் மண்ணிலேயே வீழ்ந்திருத்தல் வேண்டும் என்பது அவசியமில்லை. முன், "வணங்கினன்,மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்" என்ற தொடர் ஏற்புடையதே. அல்லாமல், முன் வணங்கியதே, மண்ணுற வீழ்ந்து வணங்கியதாதற்கும் இடையூறில்லை. இராமனே குகனை நோக்கி, "நான் உன் தொழில் உரிமையில் உள்ளேன்" என்ற பணிவுடைய சொற்களியம்ப நேர்ந்தானெனின், பரதன் இப்பொழுது குகனது பாதங்களில் விழுவதால் யாருக்கும் பரிபவமில்லை என்னத் துணியலாமே.

பரதனது பாதங்களைப் பூண்டிருந்து குகன் பரிவுடன் போற்றிய மொழிகள் மிகவும் உருக்கமானவை.

தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்றபோழ்து புகழினோய் தன்மைகண்டா
லாயிர மிராமர் நின்கே ழாவரோ தெரியி னம்மா

என்ன முன் இராமபக்தனாயிருந்த குகன் இப்பொழுது பாதபக்தனாகிவிடுகின்றான். இவ்வளர்ச்சி மிகவும் விழுமிய அழகுடையது. "பாவமும் நின்ற பழியும் பகைநண்பொடும் ஏவமும் என்பவை மண்ணுலகு ஆள்பவர் எண்ணாரோ" என முதலில் பாதனோடு வேந்தரைக் குறைத்தளந்த குகன், பிறகு, "எம்பெருமான் பின்பிறந்தோர் இழைப்பரோ பிழைப்பு" என இராமனைக் கொண்டு பரதனை நிகருறவளந்து, இறுதியில் "ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ" எனப் பரதனைக் கொண்டு இராமனைக் குறைவுற அளந்தவனாகின்றான். ஆகி,

என்புகழ் கின்ற தேழை
யெயினனே னிரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை
யொளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கண்
மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டாய்
உயர்குணத் துரவுத் தோளாய்

எனப் பாராட்டும் உவமையின் பொருத்தம் குகனுக் களிக்கும் பெருமை சிறியதன்று. மற்றவர்க்கு மிழுக் கின்றிப் பரதனுக்கும் பெருமைசெய்ய இதனின் தக்கதோர் உவமை தேர்தலரிது.

மதிப்புரை

உடற்பயிற்சி:—ஆசிரியர்,செட்டி நாட்டுச்சாண்டோ என்று அழைக்கப்படும் கீழச்சிவற்பட்டி எல். சோமசுந்திரம் செட்டியார்.

உடற்பயிற்சி என்னும் இந்நூல் எமது பார்வைக்கு வந்தது. இப்புத்தகத்தை எடுத்ததும் இதனது அமைப்பின் அழகும்,கட்டமும் ஆர்ட் கடிதமும் எம்மைக் கவரலாயின. வெளித்தோற்றமேபோல் உட்பொருளும் போற்றுவதற்குரியதே என்பதுபடிப்பவர் யாவருக்கும் தோன்றாது தீராது. இப்புத்தகம் உடற்பயிற்சிசெய்ய விரும்புபவர்களுக்குப் பயிற்சிகளைச் செய்யும் வழிகளைச்செவ்விதின் போதிக்கும் நோக்கமுடையது.இதில் 30 விதமான அப்பியாசங்கள் செவ்விய முறையில் சித்திரப்படங்களுடன் விளக்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தின் துணைகொண்டு, உடற்பயிற்சி ஆசிரியர் உதவி தேடாது, பயிற்சிகளை எளிதில் தெரிந்து அப்பியசிப்பது அருமையன்று என்றே நினைக்கின்றோம். இப்பயிற்சிப் பாடங்களைக் கூறுமுன்னர் ஆசிரியர் நூலின் நூன்முகமாகத் தினசரி வாழ்க்கையில் மனிதர் திடகாத்திரர்களாய் இருப்பதற்குக் கவனிக்க வேண்டியவைகளை 32 தலைப்புக்களில் விளக்கியிருக்கின்றார். காலையில் எழுந்திருந்து பல் துலக்கி முகங்கழுவிக் காலைப்போஜனம் அருந்துவதுமுதல் இரவு தூங்கும்வரையில் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்களைத் தமது அனுபவத்தைக் கொண்டு விளக்கிக் காட்டுகின்றார். மாந்தரானோர் நமது நாட்டில் இளவயதில் இறப்பதற்கும், நேயுற்று மனிதசக்தியில்லாது நடைபிணங்களேபோல் காலங்கழிப்பதற்கும் பாதிக் காரணம் உடற்பயிற்சி செய்யாமையே என்றும், உடல் வலியுள்ளார்தான் புத்திசாலிகளாக இருக்கமுடியும் என்றும், மேல்நாட்டார் முன்னேற்றம் எல்லாம் உடற்பயிற்சியை அவர்கள் புறக்கணிக்காது பயின்று வருவதால்தான் என்றும், சரியானபடி ஒருவன் உடற்பயிற்சி செய்து வருவானேல், நரைதிரை மூப்பு இல்லாது நூறாண்டு எளிதில் வாழலாம் என்றும் இந்நூலில் வற்புறுத்துகின்றார். உடற்பயிற்சியில் ஆர்வமுடையார்க்கு இது மிகவும் பயனளிக்கும். பயிற்சிகள் அனைத்தும் நமது நாட்டு முறையைப் பின்பற்றியனவாகும்.

இச்சிறந்தநூல் வெளிவருதற்குக் கானாடுகாத்தான் தனவணிகச் செல்வர் சா. ராம. சித, ஜம்புலிங்கம் செட்டியார் அவர்கள் பொருளுதவிசெய்துள்ளார்கள் என்று அறிய மகிழ்கின்றோம். புத்தகம் வேண்டுவோர் ஆசிரியரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலை தெரியவில்லை.

நாட்டுக்கல்வி :—இரங்கோன் நவீன கதா புத்தக சாலையினர் பிரசுரம். ஆக்கியவர் ஸ்ரீமான் சா. தாண்டவமூர்த்தி முதலியார். நாட்டுக்கல்வி என்று இக்காலம் பேசப்பெறும் பேச்சு நாட்டுக்கல்வியை வளர்க்கவில்லை என்றும், நாட்டுக்கல்வி யென்றால் என்னவென்பதையும் எவ்வாறு அக்கல்வி வளர்வதற்கு முயலவேண்டுமென்பதையும் சிறிதும் யாரும் சிந்தியாது பேசுவதே இதற்குக் காரணம் என்றும் எடுத்துக் காட்டி இந்நூலில் பின்வருமாறு கூறுகின்றார் :—

"வாய்மையும் சீலமும் உடைய வாழ்க்கையர் உயர்ந்தவர். அப்படி உயர்வுறவேண்டுமெனின் தமிழ்நாட்டார் தமிழ்க்கலையில்தேர்ச்சிபெறவேண்டும். அன்னதற்கென்று எங்கும் திண்ணைப்பள்ளிக்கூடங்கள் ஏற்படவேண்டும். அங்குச் சிறுவர்கள் 5வருடங்களாவது படித்து, பழைய நாட்கள்போல்,நாலடி, குறள், நிகண்டுசதகங்கள் முதலியன கற்றுவிடவேண்டும். பின்னர் ஆங்கிலப் பள்ளிகளில் படிப்பவர் படிக்கலாம்.எனின் தமிழ்க்கல்வி ஜனங்களினிடைத் தானாகப் பரவும். மேலும் ஏழைகளும் தொழிலாளர்களும், உத்தியோகத்திலிருப்பவர்களும் படிப்பதற்கென்று ஒவ்வொரு சிறு ஊரிலும் ஒரு இரவுப்பள்ளிநிறுவி ராமாயணம், பாரதம், குறள் சங்கநூல்கள் இவைகளைக் கற்பிக்கவேண்டும் இவ்வழி முயற்சிகள் நடக்குமேல் எல்லாச் சீரும் தமிழர்களை வந்தெய்தும்" என்று ஸ்ரீமான் தாண்டவமூர்த்தி முதலியார் அவர்கள் கூறுவன பொன்னேபோல் போற்றத்தக்கன. இச்சிறு வெளியீடு பயன் பெரிதும் அளிக்கக் கூடியதென்றே கருதுகின்றோம்.

வர்த்தமானம்

உடல்நலத்தை உத்தேசித்து இங்கிலாந்தின் மாஜி மந்திரியான ஸர். லாயிட் ஜிபார்ஜ் அவர்கள் தமது மனைவி மக்களுடனும், வயித்தியருடனும் இலங்கைக்குப் பிரயாணமாயுள்ளார் என்றும் அவர் சிலமாதகாலம் இலங்கைத்தீவில் இருப்பார் என்றும் தெரிகின்றது.

***

கராச்சியைச்சேர்ந்ததார்பார்க்கர் ஜில்லாவில் சிலவருடங்களாகச் சரியான மழையில்லாமையினால் அங்குப் பஞ்சம் அதிகரித்துள்ளதென்றும், மக்கள் வெட்டுக்கிளிகளையும், மரப்பட்டைகளையும் தின்று உயிர்வாழ்கின்றனர் என்றும் 'உலோகோபகாரி' கூறுகின்றது.

***

சமீபத்தில் கூடிய இந்தியச் சட்டசபையில் தபால் கார்டு கவர்களின் கட்டணத்தை உயர்த்துவது பற்றி நிகழ்ந்தவாதத்தில் அரசாங்கத்தார் தோல்வியுற்றனர். கார்டு கவர் கட்டணம் உயரக்கூடாதென்றே அரசாங்க அங்கத்தினர்தவிர மற்ற அங்கத்தினர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால் ராஜப்பிரதிநிதி இது விஷயமாய்த் தமது பிரத்தியேக அதிகாரத்தை உபயோகிப்பார் என்று தெரிகின்றது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க ஏமாறாதீர்

குழந்தைகளுக்கு :
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.
"நஞ்சன்கூடு பல்பொடி"
பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்

188944

KALANILAYAM.
Reg. No. M 2324.

—:வைத்திய ரத்ன:—
பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்
ESTD 1898
"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.
எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0
ஆயுர்வேதாஸ்ரமம்
தபால் பெட்டி. 287. மதருஸ்.
கேடலாக் இனாம்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0
காரனேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

விலை உள்நாடு		விலை வெளிநாடு
„ 9-0-0	அரைலெதர் பயிண்டு	„ 10-8-0
„ 8-8-0	காலிகோ	„ 10-0-0
„ 7-8-0	(பயிண்டு செய்யாதது)	9-0-0

ரயிலில் அனுப்பப்புத்தகமொன்றிற்கு 6 அணு ஆகும் தபாலில் அனுப்பவேண்டுமானால் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906.
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ்	ரூ. 1,18,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு	11,51,818.
பிரீமியம் வரும்படி	80,88,986.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி	7,47,608.

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்
1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.
பிரீமியம் மிகக்குறைவு, பாலீஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமானவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.
ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷூரன்ஸ்.
கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.
பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

— திருக்குறள் —
மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சித்திரக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 800 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துள்ளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.
கலாநிலயம், புரசை, சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்
காம சாஸ்திரம்
என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor).